# அசோகவாசகம்

இரண்டாம் படிவம்

சிறப்புப் பகுதி

37

MADRAS

376

TB
031(7)
N52
898U5

# அசோக வாசகம்

## இரண்டாம் புத்தகம்—இரண்டாம் படிவம்

### இரண்டாம் பாகம்—சிறப்புப் பகுதி

சென்னை, எம். சிடி. முத்தையாச் செட்டியார் ஹைஸ்கூல்
உதவி ஆசிரியர்

**வித்வான், எஸ். முத்து ஐயங்கார்,**
பி. ஏ. (ஹானர்ஸ்), எல். டி.,
எழுதியது

பிரசுரகர்த்தர் :

**வி. சூ. சுவாமிநாதன்**

மதுரை :: திருநெல்வேலி

[பதிப்புரிமை]

முதற்பதிப்பு—நவம்பர் 1952

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் ★ சென்னை-600 008. ★
89805

Kabeer Printing Works, Madras (2066)

# முன்னுரை

அண்மையில் கல்வி இலாகாவினரால் வெளியிடப் பெற்றுள்ள தமிழ்ப் பாடத்திட்டத்திற்கு இணங்க அசோக வாசக வரிசைகள் ஆக்கப்பட்டுள்ளன. மொழிப் பாடங்களில் முதல் பிரிவு தமிழாக உள்ள மாணவர்களுக்காகப் பொதுப் பகுதியும், இரண்டாம் பிரிவும் தமிழாக உள்ள மாணவர்களுக்காகச் சிறப்புப் பகுதியும் எழுதப் பெற்றுள்ளன.

பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட விஷயங்களில் பெரும்பான்மையானவை இவ்வாசகங்களில் இடம்பெற்றுள்ளன. விஞ்ஞானம், சரித்திரம், இலக்கியம் முதலிய பல்வேறு அறிவுத்துறைகளிலிருந்து பாட விஷயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த அந்த வகுப்பின் தகுதிக்குத் தக்கபடி விஷயங்களும் மொழிநடையும் அமைவதில் கவனம் செலுத்தப் பெற்றுள்ளது. தமிழ் இலக்கியங்களிலிருந்தும் பல பாடங்களுக்கு விஷயங்கள் தேர்ந்து கொள்ளப்பட்டுள்ளன. பஞ்ச தந்திரம், அரேபிய இரவுக் கதைகள், டால்ஸ்டாய் கதைகள் முதலிய நூல்களிலிருந்து சில கதைகள் எடுத்தாளப் பெற்றுள்ளன.

பாட விஷயங்களைப் பற்றிய வினாக்களுடன் மொழிப் பயிற்சிக்கான கேள்விகளும் தரப்பட்டுள்ளன. இந்த வாசக வரிசைகள் மாணவருக்கும் ஆசிரியர்களுக்கும் முறையே கற்கவும் கற்பிக்கவும் இன்பந் தருவனவாயிருக்கும் என்று நம்பப்படுகிறது.

சென்னை
17-10-'52

ஆக்கியோன்

# பொருளடக்கம்

## உரைநடை


| வரிசை | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் | ... | 1 |
| 2. | ஒற்றனு புலவனு ? | ... | 9 |
| 3. | கால்டுவெல் | ... | 14 |
| 4. | சாணக்கியர் | ... | 19 |
| 5. | அச்சு எந்திரம் | ... | 26 |
| 6. | சீதக்காதி வள்ளல் | ... | 34 |
| 7. | ஜாம்ஷெட்ஜி டாடா | ... | 40 |
| 8. | பலவித மாணுக்கர் | ... | 48 |
| 9. | மார்க்கோனி | ... | 53 |


## செய்யுள்


| | | | |
|---|---|---|---|
| I | வாழ்த்து | ... | 63 |
| II | நீதி | ... | 65 |
| III | கதை (நண்டு கொக்கைக் கொன்ற கதை) | ... | 69 |
| IV | பிறவகை | ... | 72 |

# அசோக வாசகம்

## இரண்டாம் புத்தகம்—சிறப்புப் பகுதி

### 1. வி. கோ. சூரியநாராயண் சாஸ்திரியார்

நம் நாட்டில் ஆங்கிலக் கல்வி வேரூன்றிவிட்ட பிறகு, தாய்மொழியைப் பயில்வது மிகவும் குறைந்து விட்டது. ஆங்கிலம் கற்பதும் ஆங்கிலத்திலேயே பேசுவதும்தான் பெருமை தரும் செயல் எனக் கருதினர் பெரும்பாலான மக்கள். தமிழ் நாட்டிலும் இக் கருத்தே பரவியிருந்தமையால், கற்ருேர் தமிழ் மொழியை அலட்சியம் செய்து வந்தனர். தவருன இக்கருத்தை மாற்றி, தாய்மொழிப் பயிற்சியின் அவசியத்தை எடுத்துக் காட்டியவர்களில் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் முதலிடம் பெறத்தக்கவராவார்.

சூரிய நாராயண சாஸ்திரியார் 1870-ல் மதுரைக்கு அருகிலுள்ள விளாச்சேரி என்னும் கிராமத்தில் கோவிந்த சிவனுர் என்பவருக்கு இரண்டாம் புதல்வராய்ப் பிறந்தார். சுந்தரேச சாஸ்திரியார் என்பவர் மூத்த புதல்வர் ஆவார்.

சூரிய நாராயண சாஸ்திரியார் சிறு வயதில் மிதமிஞ்சிய சுறுசுறுப்பும் துடுக்கும் உள்ளவராயிருந்தார். பத்து வயதுவரையில் தமிழ்ப் பள்ளியில் பயின்று, பின் பசுமலைக் கல்லூரியில் சேர்ந்து படித்

தார். தினந்தோறும் விளாச்சேரியிலிருந்து ஒரு மைல் தூரத்திலிருந்த பசுமலைக்கு நடந்தோ போக்கு வண்டியில் ஏறியோ சென்று வந்தார். பசுமலையில் கல்வி பயிலும்பொழுது, தமிழில் சிரத்தைக் குறைவு உள்ளவராயிருப்பது கண்ட தமிழாசிரியர் இவரைக் கண்டித்தார். இவர் ரோசங்கொண்டு அதுமுதல் தமிழைக் கருத்துடன் படிக்கலானார்.

இதன் பின்னர் இவர் மதுரை சேர்ந்து ஜில்லா ஹைஸ்கூலில் கல்வி பயில ஆரம்பித்தார். அப்பொழுது சாஸ்திரியார் தம் தந்தையாரிடம் வடமொழியையும் தமிழ் வித்துவான் மதுரைச் சபாபதி முதலியார் அவர்களிடம் தமிழ்மொழியையும் நன்கு பயின்றார். சிறந்த அறிவு படைத்தவராதலின் வெகு விரைவில் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஆழ்ந்த ஞானம் பெற்றார். தமிழ் மொழியில் சங்கச் செய்யுட்களை ஆராய்ந்து இன்புறும் அறிவு வளம் படைத்தார். விரைவாகக் கவி பாடும் ஆற்றலும் இவருக்கு இருந்தது.

1890-ம் ஆண்டில் சென்னைச் சர்வகலாசாலையார் நடத்திய எப். ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். இதனால் இவரது மேற்படிப்பிற்கு சேதுபதி மகாராஜா அவர்களது உபகாரச் சம்பளம் கிடைத்தது. கல்வியில் இவருக்கு இருந்த ஊக்கத்தைக் கண்ட இவருடைய நண்பர் விசுவநாத முதலியார் என்பவர் இவரைத் தமது செலவில் சென்னைக்கு அழைத்துச் சென்று, கிறிஸ்தவக் கலாசாலையில் பி. ஏ. வகுப்பில் சேர்த்தார்.

அக்காலத்தில் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமை வகித்தவர் கல்வி நலம் வாய்ந்த மில்லர் துரை ஆவர். முதல்நாள் வகுப்பில் ஒவ்வொருவர் பெயரையும்

வாசித்த மில்லர் துரையவர்கள் சாஸ்திரியாரது நீண்ட பெயரைக் கண்டு மயங்கி, "உமது பெயரை மாற்றிக் கொள்ள முடியுமோ?" என்று இவரைக் கேட்டார். இவர் "அப்படியே செய்கிறேன்," என்று கூறினர். பின்னர் கல்லூரிக் குமாஸ்தாவிடம் சென்று "சூரிய நாராயணன்" என்றிருந்த பெயரை "சூரிய நாரா யண சாஸ்திரி" என்று மாற்றிவிட்டார். மறுதினம்



வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

வகுப்பில் துரையவர்கள், முன்னதைவிட நீண்ட பெயரைக் கண்டு ஆச்சரியமுற்று, இவரிடம் காரணம் கேட்டார். இவர், "ஐயா! தாங்கள் என் பெயரை மாற்றச் சொன்னீர்கள். அதன்படியே மாற்றிவிட்

டேன்,'' என்று தைரியமாகப் பதில் கூறினர். இவரது தைரியத்தையையும், புத்திக் கூர்மையையும் கண்டு வியந்த மில்லர் துரை இவரது கல்வி அபிவிருத்தியிலும் சொந்த நன்மையிலும் தாமே ஊக்கம் காட்டி உதவி புரிந்தார்.

1892-ல் சாஸ்திரியார் பி. ஏ. பரீட்சையில் தமிழ் மொழியிலும் வேதாந்த தத்துவ சாஸ்திரத்திலும் இம் மாகாணத்தில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றுர். அதற்குரிய **பாஸ்கர சேதுபதியவர்களது** பொற் பதக்கத்தையும் பெற்றுர். அக்காலத்தில் தமிழ்க் கலையில் தேர்ந்தவராய் விளங்கிய **சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள்** இவருடைய தமிழறிவைக் கண்டு மகிழ்ந்து இவருக்கு **திராவிட சாஸ்திரி** என்ற பட்ட மளித்தார்.

1893-ல் இவர் பி. ஏ. பட்டம் பெற்றவுடன் மில்லர் துரை இவரைத் தம் கலாசாலையிலே ஆசிரியராய் அமருமாறு கூறினர். இவர் அதற்கு இசைந்து அக்கலாசாலையில் தமிழ்ப் பண்டிதர் பதவியை ஏற்றுக் கொண்டார். அதுமுதல் இவரது தமிழபிமானம் மேன் மேலும் பெருகிற்று. 1895-ல் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் காலஞ்சென்றுர். சாஸ்திரியாருடைய நுண்ணறிவையும் போதன சக்தியையும் நன்கு உணர்ந்த மில்லர் துரை இவரையே தலைமைத் தமிழ்ப் பண்டிதராக்கினர். அப்போது இவருக்கு வயது 25.

கல்லூரி வகுப்புக்களில் பிரசங்கம் செய்யும் பொழுது தமிழைப் புறக்கணிக்கும் மாணவர்கூட ஆர்வத்தோடு முன்வந்து பயன்பெறுமாறு போதித்தார். தம் இல்லத்தில் சில மாணவரை அழைத்து இயற்றமிழ் பயிற்றினர். இவர்களுக்கு ஆண்டுதோ

றும் தனித்தமிழ்ப் பரீட்சைகள் நடத்திப் பரிசுகள் வழங்கினர். "மெய்வருத்தம் பாரார் ; கைம்மாறு கருதார் ; தமிழ் வளர்ச்சி ஒன்றே கடப்பாடாக உழைப்பார்" என்பதே இவருக்குக் கிடைத்த பெரும் புகழாகும்.

படிக்கும் காலத்தில் சாஸ்திரியார் செங்கல்வராய முதலியார் என்பவருடைய வீட்டில் வசித்துவந்தார். அவருடைய குமாரர்தாம் சரவண முதலியார் என்பவர். இரவில் வெகுநேரம் வரை ஊக்கத்துடன் படிக்கும் சாஸ்திரியாரைக் காட்டி வீட்டுக்காரரர் தம் குமாரரையும் அவ்வாறு படிக்கவேண்டும் என்று கூறுவாராம். சாஸ்திரியார் கிறிஸ்தவக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியர் பதவி ஏற்றபின் சரவண முதலியாருக்குத் தமிழ் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அவர் சாஸ்திரியாரைத் தமிழ் கற்பிக்கவேண்டும் என்று கேட்டார். இவர் தமக்கு அவகாசமில்லை என்று கூறிவிட்டார். அது கேட்ட சரவண முதலியார் அன்று முழுவதும் தம் வீட்டுக்குச் செல்லாமல் அங்கேயே இருந்து விட்டார். தமிழில் அவருக்கிருந்த ஆர்வத்தைக் கண்ட சாஸ்திரியார் அவர்மீது அன்புகொண்டு அவகாசம் ஏற்பட்டபொழுது பாடம் சொல்ல இசைந்தார். ஒரு மாதமான பின் அம்மாதச் சம்பளமாக ஒரு தொகையை அளிக்க முதலியார் முயன்ற பொழுது இவர் கோபத்துடன், "யாம் தமிழ் மொழியை எவர்க்கும் விற்பதில்லை. இவ்வெண்ணம் உனக்கிருக்குமாயின் இனி நீ இங்கே வரவேண்டாம்," என்று கூறினராம். முதலியாரும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். தமிழ் மொழி பயில்வோரிடத்து யாதொரு கைம்மாறும் சாஸ்திரியார் எதிர்பார்த்ததில்லை என்பதற்கு இது ஒன்றே சிறந்த சான்றாகும்.

சூரிய நாராயண சாஸ்திரியார் செய்த தமிழ்ப் பணிகள் பலதிறப்பட்டன. ஞான போதினி என்ற தமிழ் மாதப் பத்திரிகையைத் தம் நண்பர் மு. சு. **பூர்ணலிங்கம் பிள்ளை** யவர்களோடு சேர்ந்து கொண்டு நான்கு வருடகாலம் நடத்தினர். அப் பத்திரிகையில் வெளிவந்த விஷயங்கள் பழமையும் புதுமையும் கலந்து அறிஞருக்கு நல்விருந்தாயின. தமிழ் மொழியில் நாடக நூல்கள் இல்லை என்னும் குறையை நீக்கக் கருதி, **கலாவதி, ரூபாவதி, மான விஜயம்** என்னும் நாடக நூல்களை இயற்றினர். நாடக நூல்களுக்கு இலக்கணம் கூறும் **நாடகவியல்** என்ற நூலையும் எழுதி வெளியிட்டார். "பரிதிமாற் கலைஞன்" என்ற புனை பெயரில் **தனிப் பாசுரத் தொகை** என்ற சிறிய அகவற்பாக்களாலாகிய நூலொன்றை வெளியிட்டார். இந்நூலை, தமிழ்ப் புலவரான ஜி. யு. போப் துரை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளது இதன் சிறப்பைத் தெரிவிக்கும். செந்தமிழ் நடையில் எழுதப்பெற்ற **மதிவாணன்** என்னும் நவீனம், **பாவலர் விருந்து, தமிழ் மொழி யின் வரலாறு** என்ற ஆராய்ச்சி நூல், **தமிழ் வியா சங்கள், தமிழ்ப் புலவர் சரித்திரம்** முதலியன இவர் எழுதிய பிற நூல்களாம்.

இவர் தமது தேகத்தில் ஏற்பட்டிருந்த க்ஷய ரோகத்தையும் கருதாது தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்து தம் உயிரையே தமிழ்மொழிக்காகத் தியாகம் செய்தார். 1903-ல் (தமது முப்பத்து மூன்றும் வய தில்) க்ஷயரோகத்தால் தேகம் மிக மெலிவடைந்து இருமலால் மிகவும் அவதிப்பட்டார். அப்பொழுது கூட "ஐயா! இருமல் எம்முடன் பெருமல் செய் கிறதே!" எனக் கூறிக்கொண்டே பாடம் சொல்லு

வாராம். இத்தகைய புலவர் மணி 1903-ல் நவம்பர் மாதம் இறைவன் திருவடி சேர்ந்தார். இன்னும் சில ஆண்டுகள் இவர் இருந்திருப்பின் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் எத்துணையோ நலம் விளைந்திருக்கக் கூடும்.

## பயிற்சி

I பொருள் கூறு :—

வேரூன்றி, அலட்சியம், துடுக்கு, சிரத்தைக் குறைவு, ரோசம், ஆழ்ந்த ஞானம், அறிவ்வளம், உபகாரச் சம்பளம், பொற்பதக்கம், புறக்கணிக்கும், இயற்றமிழ், பயிற்றினர், மெய் வருத்தம், கடப்பாடாக, அவகாசம், பலதிறப்பட்டன, அறிஞருக்கு நல்விருந்து, அகவற்பாக்கள், நவீனம், க்ஷயரோகம், பெருமல், தியாகம்.

II உன் சொந்த வாக்கியங்களில் அமைத் தெழுது :—

வேரூன்றிவிட்டது, சிரத்தை, புறக்கணி, மெய்வருத்தம், கடப்பாடு, பலதிறப்பட்டன, தியாகம்.

III விடை கூறு :—

1. கற்றோர், தமிழ்மொழியை ஏன் அலட்சியம் செய்து வந்தனர் ?

2. சூரிய நாராயண சாஸ்திரியாரின் பிறந்த ஊர் எது ? தந்தையாரின் பெயர் என்ன ?

3. சாஸ்திரியார் தமிழ்மொழியைக் கருத்துடன் பயிலத் தொடங்கியமைக்குக் காரணம் யாது ?

4. பி. ஏ. படிப்பதற்குச் சாஸ்திரியார் உபகாரச் சம்பளம் பெற்றதற்குக் காரணமென்ன ?

5. மில்லர் துரை இவரது பெயரைக் குறித்து இவரிடம் என்ன கேட்டார் ? இவர் செய்தது என்ன ? இவர் செய்தது எவ்வாறு பொருந்தும் ?

6. திராவிட சாஸ்திரி என்ற பட்டம் இவருக்கு எப்பொழுது அளிக்கப்பட்டது ? யாரால் ?

7. பி. ஏ. பரீட்சையில் தேறியபின், இவருக்கு என்ன உத்தியோக பதவி கிடைத்தது? அதில் எப்பொழுது உயர்வு பெற்ருர்?

8. தமிழ் மொழிக் கல்வியைப் பரப்புவதற்கு இவர் எங்ஙனம் பாடுபட்டார்?

9. தமிழைக் கற்பிப்பதற்குச் சாஸ்திரியார் ஊதியம் பெற்றதில்லை என்பதற்கு ஒரு சான்று தருக.

10. இவர் நடத்திய பத்திரிகை எது?

11. நாடக நூல்கள் தமிழில் இல்லை என்ற குறையை இவர் எவ்வாறு போக்கினுர்?

12. தனிப்பாசுரத் தொகை எத்தகைய நூல்?

13. நாடகவியலில் என்ன கூறப்பட்டுள்ளது?

14. இவர் இயற்றிய உரைநடை நூல்களில் ஏதேனும் மூன்று கூறு.

15. இவர் தம் உயிரையே தமிழ்மொழிக்காகத் தியாகம் செய்தார் என்று எவ்வாறு கூறலாம்?

IV இலக்கணம் :—

1. சேர்ந்துள்ள சொற்களைப் பிரித்தெழுது :—

இயற்றமிழ், நல்விருந்து, அகவற்பாக்கள், கடப்பாடாக.

2. பின்வரும் சொற்களைச் சந்திசேர்த்து எழுது :—

பெற + தக்கவர், பெயரை + கண்டு, தமிழ் + கலை, மேல் + மேல்.

3. பின்வரும் வார்த்தைகளிலிருந்து குற்றுயிர், நெட்டுயிர், வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து ஆகியவற்றுக்கு உதாரணங்கள் எடுத்துக் காட்டு :—

ஆங்கிலம், அருகில், என்பவர், உதவி, ஐயா.

## 2. ஒற்றனா புலவனா?

சங்க காலத்தில் ஒருசமயம் சோழ நாடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இரண்டு அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்று பெயர் பெற்ற அந்த இரண்டு அரசர்களும் சோழ வமிசத்தைச் சேர்ந்தவரே. அவ்விருவருக்கும் கடுமையான பகைமை மூண்டிருந்தமையால், அடிக்கடி போர்களும் முற்றுகைகளும் நிகழ்ந்தன. இதனால் மக்கள் பலவாறு அவதியுற்றனர். ஒரு பிரதேசத்திலிருந்து மற்றொரு பிரதேசத்திற்கு அவர்கள் முன்போல் எளிதில் போய்வர முடியாமல் பல தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. ஆனால் தமிழ்ப் புலவர்களை இரண்டு அரசர்களும் ஆதரித்தனர்; அதனால் அவர்களுக்குச் சாதாரண மக்களைவிடச் சற்று அதிகமான செல்வாக்கு இருந்தது. அவர்கள் சோழநாட்டின் இரு பகுதிகளுக்கும் சென்று வருவதுண்டு. இளந்தத்தன் என்ற புலவன் இளம்பிராயத்தினன். புலவர் குழாத்திடையே அவன் தன் புலமையை நிலை நாட்டவில்லை. அரசர்களும் அவனது பெயரைக் கேள்வியுற்றதில்லை.

இளந்தத்தன் முதன் முதலில் நலங்கிள்ளியின் அவையை அடைந்தான்; அவ்வரசனை ஓர் இனிய செய்யுளால் பாடினான். நலங்கிள்ளி அவனுடைய புலமையைப் போற்றித் தகுந்த சன்மானம் அளித்தான். சில நாட்கள் நலங்கிள்ளியின் அவையில் இருந்தபின், இளந்தத்தன் சோழநாட்டின் மற்றொரு பகுதியான நெடுங்கிள்ளியின் ராஜ்யத்தை அடைந்தான்; அதன் தலைநகராயிருந்த உறையூரில் நுழைந்தான்.

நெடுங்கிள்ளியின் வீரர்கள், பகைவன் நாட்டி

லிருந்து வருபவர்களை யெல்லாம் நன்கு கண்காணித்து வந்தனர். புதியவனாக வந்த இளந்தத்தன் ஒற்றனா யிருப்பானோ என்று அவர்கள் ஐயமுற்றனர். புல வனைச் சில வீரர்கள் தடுத்து நிறுத்திப் பல கேள்வி களைக் கேட்டனர். புலவன், தான் நலங்கிள்ளியின் ராஜ்யத்திலிருந்து வருவதாகவும், தனக்கு உறையூரில் யாரையும் தெரியாதென்றும், நெடுங்கிள்ளியைப் பாடிப் பரிசில்பெற வந்திருப்பதாகவும் கூறினான்; நலங்கிள்ளியிடம் தான் பெற்ற வரிசைகளையும் காட்டி னான். ஆனால் இளந்தத்தனுடைய பேச்சு, வீரர் களின் சந்தேகத்தை வளர்த்தது. படைத் தலைவ னிடம் புலவன் அழைத்துச் செல்லப்பட்டான். படைத் தலைவனும் அப்புலவனைப் பலவாறு விசாரணை செய்தான்; முடிவாக, இளந்தத்தன், ஒரு புலவன் வேடத்தில் வந்த ஒற்றனே என்று துணிந்தான்.

நெடுங்கிள்ளியிடம் சென்ற அப்படைத் தலைவன், புலவனெனச் சொல்லிக் கொண்டு, பகையரசனிட மிருந்து வந்துள்ள ஓர் ஒற்றனைத் தான் சிறை செய் திருப்பதாகக் கூறினான். அரசன் சற்றும் ஆராயாது, அவ்வொற்றனைக் கொன்றுவிட உத்தரவிட்டான். அரச ஆணை அரண்மனை வாயிலில் நிறுத்தப்பட் டிருந்த இளந்தத்தனுக்குத் தெரிவிக்கப்பட்டது. பரிசில் பெறவந்த இடத்தில் கொலைத் தண்டனை அளிக்கப் பெற்ற அவ்விளம் புலவனது மனம் என்ன பாடுபட்டிருக்கும்!

படைவீரர்கள் அவனைக் கொலைக்களத்திற்கு நடத்திச் செல்ல முற்பட்டார்கள். அப்பொழுது அரண்மனை வாயிலுக்குக் கோவூர் கிழார் என்ற பெரும்புலவர் தம் மாணவரும் வேறு சிலரும் புடைசூழ வந்து கொண்டிருந்தார். அங்கிருந்த மக்களின்

பேச்சிலிருந்து, அவர் கோவூர் கிழார் என்பதை இளந்தத்தன் அறிந்தான். தமிழ் நாடெல்லாம் அவரது புலமையும் பெருமையும் பரவி யிருந்தபடியால், இளந்தத்தன் அவரைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தான். அவரைச் சரணடைந்தால், தான் ஒருகால் உய்யக் கூடும் என்று அவன் எண்ணினான். அவ்வாறே அப்புலவரை விளித்துத் தன் நிலைமையைக் கூறிக் கதறினான்.

கோவூர் கிழார் இளந்தத்தனுடன் சிறிது நேரம் பேசி, அவன் உண்மையில் புலவனே, ஒற்றனல்லன் என்பதை உணர்ந்து கொண்டார். கொலைத் தண்டனையை உடனே நிறைவேற்ற வேண்டாமென்று படைவீரர்களிடம் கேட்டுக் கொண்டார். அவரிடம் பெருமதிப்பு வைத்திருந்த வீரர்கள் அதற்குச் சம்மதித்தனர்.

கோவூர் கிழார் நெடுங்கிள்ளியின் சபைக்குச் சென்றார். வழக்கம் போல் முகமன் கூறியபின், புலவர் இளந்தத்தனைத் தப்புவிக்கும் நோக்கத்துடன் ஒரு இனிய செய்யுளை இயற்றி அரசனிடம் அதைப் பாடினார். அச் செய்யுளின் கருத்து :

"புலவரது வாழ்க்கையை என்னென்று கூறுவது! பழுத்த மரங்களைத் தேடிக் கொண்டு பறவைகள் செல்வதைப் போல், வள்ளல்கள் எங்கிருக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் செல்கிறார்கள். நெடுந்தூரப் பயணமாயிற்றே, வழியில் பல பாலை நிலங்களைக் கடக்க வேண்டுமே என்றெல்லாம் அவர்கள் கவலை கொள்கிறார்களா ? இல்லை. பல இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு வழிநடந்து ஒரு வள்ளலை அடைகிறார்கள் ; ஏதோ தமக்குத் தெரிந்ததைப் பாடுகிறார்கள் ; வள்ளல் கொடுத்ததை நிறைந்த மனத்

துடன் பெற்றுக் கொள்கிறார்கள். அப்படிப் பெற்ற பொருளைச் சேகரித்து வைத்துப் பெருஞ்செல்வர்களாக வாழ்கிறார்களா? அதுவும் இல்லை. கிடைத்ததை எல்லாம் தாராளமாகச் செலவழித்து விடுகிறார்கள். தாமும் உண்டு, தம் சுற்றத்தாருக்கும் கொடுத்து விடுகிறார்கள். விரைவிலேயே ஏழ்மை நிலை அடைந்து மறுபடியும் பரிசில் தரும் வள்ளல்களைத் தேடிப் புறப்படுகிறார்கள். இந்த மனநிலையுடைய புலவர்கள். பிறருக்குக் கேடு நினைத்திருப்பார்களா? ஒரு பொழுதும் இல்லை. அவர்களுடைய மனத்தில் வஞ்சகம், தீங்கு முதலியவற்றுக்கு இடமே இல்லாததால், பகைவர்கள் நாணமடையும்படி தலை நிமிர்ந்தே சென்று கல்வித் துறையில் வெற்றி கொள்வோர் அவர்கள். நும்போன்ற அரசர்களுக்கு உள்ள பெருமை அவர்களுக்கும் உண்டு.''

கோவூர் கிழார் பாடிய இனிய செய்யுளைக் கேட்ட நெடுங்கிள்ளி மிக்க மகிழ்ச்சியுற்றான்; செய்யுளில் கூறப் பெற்றிருந்த கருத்துக்கள் உண்மை என்பதையும் ஒப்புக் கொண்டான். தருண மறிந்து, கோவூர் கிழார் இளந்தத்தனது நிலைமையைக் கூறினார்; அவன் ஒற்றனல்லன் என்றும், அவன் புலவன் என்பது தமக்குத் தெரியுமென்றும் கூறினார். அரசன், ''படைத் தலைவனது சொல்லை நம்பி ஆராயாது உத்தரவிட்டதற்கு மன்னிக்க வேண்டும். அப்புலவனை விடுதலை செய்து அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்,'' என்று கூறி அவரிடமே அந்தப் பொறுப்பை ஒப்புவித்தான். இளந்தத்தன் கோவூர் கிழாரின் கருணையால் உயிர் பிழைத்தான்; நெடுங்கிள்ளியைப் பாடிப் பரிசில்களும் பெற்றுச் சென்றான். கோவூர் கிழாரை இடைவிடாது வாழ்த்தியது அவன் மனம்.

## பயிற்சி

I பொருள் கூறு :—

கடுமையான, செல்வாக்கு, பிராயத்தினன், குழாம், கண் காணித்து, பரிசில் பெற, வரிசை, துணிந்தான், புடைசூழ, ஒருகால், உய்யக்கூடும், முகமன், பாலைநிலம், இன்னல், இடை விடாது.

II உன் சொந்த வாக்கியங்களில் அமைத்தெழுது :—

கடுமையான, செல்வாக்கு, கண்காணி, புடைசூழ, இன்னல், இடைவிடாது.

III விடை கூறு :—

1. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்ற அரசர்களிடையே பகைமை மூண்டிருந்ததால் மக்கள் எவ்வாறு அவதியுற்றனர்?
2. புலவர்களுக்கு என்ன சலுகை இருந்தது?
3. இளந்தத்தன் முதலில் யாரைப் பாடிப் பரிசில் பெற்ருன்? பிறகு யாருடைய ராஜ்யத்துக்குச் சென்ருன்?
4. இளந்தத்தனைப் படைவீரர்கள் எதற்காகச் சிறை செய்தனர்?
5. இளந்தத்தனுக்கு நெடுங்கிள்ளி விதித்த தண்டனை யாது?
6. கோவூர் கிழார் நெடுங்கிள்ளியிடம் புலவர்களின் வாழ்க்கையை எவ்வாறு விவரித்தார்?
7. அரசர்களுக்கு உள்ள பெருமை புலவர்களுக்கும் உண்டு என்று கோவூர் கிழார் எதனுல் கூறினுர்?
8. கோவூர் கிழார் பாடலைக் கேட்ட அரசன் என்ன செய்தான்?

IV இலக்கணம் :—

1. பின்வரும் சொற்களுக்குத் திணை, பால், இடம் கூறு :—

வந்தான், நாம், செல்வோம், மரங்கள், செய்தீர், அவள்.

2. பின் வரும் சொற்களைச் சந்தி சேர்த்து எழுது :—

தகடு + பெட்டி ; விலை + உயர்ந்தது ; இருப்பு + இடம் ; கல் + கரி.

## 3. கால்டுவெல்

கிறிஸ்தவ மதப் பிரசாரத்திற்காக நம் நாட்டுக்கு வந்த ஐரோப்பியரில், ஒரு சிலர் நம் நாட்டு மொழிகளை நன்கு கற்றுப் பெரும் புலமை பெற்று, இலக்கிய நூல்களையும், மொழி ஆராய்ச்சி நூல்களையும் இயற்றியுள்ளனர். தமிழ் மொழிக்கு இத்தகைய தொண்டு செய்தவர்களில் கால்டுவெல் பெரும் புகழுக்கு உரியவராவர்.

கால்டுவெல் 1815-ல் ஸ்காட்லாந்து நாட்டில் பிறந்தவர். இளமையில் தம் தந்தையாரிடமும், பிறகு பள்ளிகளில் சேர்ந்தும் நன்கு கல்வி கற்றார். கிரீக், லத்தீன் முதலிய மொழிகளையும், சமய நூல்களையும் பயின்று தேர்ச்சியுற்றார். பிற நாடுகளில் சென்று மதப்பிரசாரம் செய்வதுடன், அந்நாட்டு மொழிகளைக் கற்று, மொழியாராய்ச்சியும் செய்யவேண்டும் என்று இவர் தமக்குள் தீர்மானித்துக் கொண்டார். இத்தகைய தொண்டுக்கு ஏற்ற இடமாகத் தமிழ்நாடு இவரால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அயல் நாடுகளில் கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்வதற்காக ஏற்பட்டுள்ள எஸ். பி. ஜி. சங்கத்தில் கால்டுவெல் சேர்ந்தார். பிறகு நம் நாடுவந்து சென்னையில் சில ஆண்டுகள் இருந்தார். அக்காலத்தில் வின்ஸ்லோ, ஆண்டர்ஸன் முதலிய பாதிரிமார்களின் நட்பைப் பெற்றார். அவர்களுடைய உதவியாலும் தம் முயற்சியாலும் இவர் தமிழ்மொழியை நன்கு கற்றார். தெலுங்கு, சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளையும் தருணம் வாய்த்தபொழுது கற்று வந்தார். சுமார் மூன்று ஆண்டுகள் சென்னையில் வசித்தபின், கால்டுவெல் திருநெல்வேலி ஜில்லாவில்

மதப் பிரசாரத்திற்காகப் புறப்பட்டார். தமிழ்நாட்டின் சிறப்பை நேரில் காண எண்ணிய இவர் கால் நடையாகவே பல ஊர்களையும் பார்த்துக்கொண்டே திருநெல்வேலி சென்றார். அந்த ஜில்லாவில் இடையன்குடி என்ற ஒரு குக்கிராமம் இவருடைய இருப்பிடமாயிற்று.

இடையன்குடியில் வாழ்ந்த மக்களுடன் இவர் நெருங்கிப் பழகி, அவர்களுக்குக் கல்வியறிவு ஊட்டி



கால்டுவெல்

ஞர்; சுகாதார முறையில் வாழக் கற்றுக் கொடுத்தார். மதப் பிரசாரமும் செய்தார். நாளடைவில் பலர்

கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தனர். இவர் பல பள்ளிகள் அமைத்துச் சிறுவர், சிறுமியருக்கு முறையாக எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்தார்.

கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்த தமிழ்மக்களின் உபயோகத்திற்காக, கிறிஸ்தவ வேத நூலான பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நம் கால்டுவெல்லும், போப் என்ற அறிஞரும், வேறு சிலரும் சேர்ந்து பல ஆண்டுகள் உழைத்தபின் பைபிள் தமிழில் ஆக்கப்பட்டது. இந்த முயற்சிகளிலும் மதப்பிரசாரத்திலும் மிகவும் உழைத்த கால்டுவெல் பிஷப் என்ற கிறிஸ்தவ குருப் பட்டம் பெற்ருர்.

இங்கு சமயப் பிரசாரத்திற்காக வந்த ஓர் ஆங்கில அறிஞரின் குமாரத்தி எலிஸா அம்மையாரை கால்டு வெல் மணம் செய்துகொண்டார். அந்த அம்மையார் இவருடைய தொண்டிற்கு உதவும் உத்தம குணம் பெற்றிருந்தமையால் இவர்களுடைய இல்லறம் சிறந்து விளங்கிற்று. இடையன்குடியிலேயே இவர் கள் வாழ்ந்து, பல்லாண்டுகள் மக்களுக்குத் தொண்டு செய்தனர். இவருடைய 76-ம் வயதில் உடல் நோயுற்றது. அப்பொழுது உடல் நலங் கருதி கோடைக்கானலுக்குச் சென்ருர். அங்கு 1891-ல் இவர் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவருடைய விருப் பப்படி இவரது உடல் இடையன்குடிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டது.

கால்டுவெல் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்தில் மதப்பிரசாரம் செய்ததைத்தவிர, தென்னிந்திய மொழிகள் எல்லாவற்றையும் நன்கு கற்றுவந்தார். இவற்றை ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளையும் குறித்துக்கொண்டார். பல ஆண்டு

கள் இந்த ஆராய்ச்சியைச் செய்த இவர் முடிவாக "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற ஓர் அரிய நூலை வெளியிட்டார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் ஆகிய மொழி களும், வேறு சில ஆதிவாசிகளின் மொழிகளும் திராவிட இன மொழிகள் என்றும், இவை ஒரு மூல பாஷையிலிருந்து தோன்றி நாளடைவில் வேறுபட் டுள்ளன என்றும், இம் மொழிகளுள் தமிழ் அதிக மாகச் சிதைவுறாமல் பழைமைவாய்ந்து விளங்கும் மொழி என்றும், இப்பெரியார் விளக்கியுள்ளார். இந் நூல் அறிஞர் பலராலும் பாராட்டப்படுகிறது. திராவிடமொழிகள் ஒரு தனியினம் என்பதை இந்நூல் நன்கு நிரூபிக்கிறது.

மதத் தொண்டிற்காகவும், மொழி ஆராய்ச்சிக் காகவும் 'டாக்டர்' முதலிய பட்டங்கள் இவரைத் தேடி அடைந்தன. எனினும் தமிழ்மக்கள் இவரைக் **கால்டுவெல் ஐயர்** என்று வழங்கித் தம் நன் மதிப்பையும் அன்பையும் காட்டியதொன்றே இவருக் குப் பெரிதும் மகிழ்ச்சி தந்திருக்கும் என்று ஊகிக்கலாம்.

## பயிற்சி

**I பொருள் கூறு :—**

மொழி ஆராய்ச்சி, குக்கிராமம், அறிவு ஊட்டினர், அடக்கம் செய்யப்பட்டது, ஒப்பிட்டு, மூலபாஷை, சிதைவுறாமல், நன் மதிப்பு.

**II உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி :—**

அறிவு ஊட்டு, ஒப்பிடு, சிதைவுறு, நன்மதிப்பு.

III விடை கூறு :—

1. கால்டுவெல் எந்த நாட்டினர் ?

2. கல்வி பயிலும்பொழுதே இவர் தம் வாழ்க்கைத்தொழில் யாதாயிருக்க வேண்டுமென நிச்சயித்தார் ?

3. தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளைக் கால்டுவெல் எப்பொழுது கற்றார் ?

4. திருநெல்வேலி ஜில்லாவில் கால்டுவெல் எந்த ஊரில் தங்கினர் ? அங்கே இவர் செய்த தொண்டுகள் என்ன ?

5. கால்டுவெல்லுக்கு பிஷப் என்ற பட்டம் எப்பொழுது கிடைத்தது ?

6. கால்டுவெல்லின் மனைவியாரின் பெயர் என்ன ? அவர் தம் கணவருக்கு எவ்வழிகளில் உதவினர் ?

7. கால்டுவெல் எழுதி வெளியிட்ட நூல் எது ? அதில் இவர் கூறுவதென்ன ?

8. தமிழ் மக்கள் இவரிடம் வைத்திருந்த மதிப்பு எதனல் விளங்குகிறது ?

IV இலக்கணம் :—

பெயர்ச் சொற்கள் வாக்கியங்களில் வரும்பொழுது சில உருபுகளைப் பெற்று பொருள் வேறுபாடு அடையும். இது வேற்றுமை எனப்படும். வேற்றுமை அடையாத பெயர்ச்சொல் முதல் வேற்றுமை எனப்படும். மற்றவை இரண்டாம் வேற்றுமை முதல், எட்டாம் வேற்றுமை வரையில் வேறுபட்ட, பொருளுக்கும் உருபுக்கும் தகுந்தபடி வகை செய்யப்பட்டுள்ளன.

சாத்தன், சாத்தனை, சாத்தனல், சாத்தனுக்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண், சாத்தா !—இவை, சாத்தன் என்ற சொல் முறையே எட்டு வேற்றுமைகளிலும் வருவதைக் காட்டுகின்றன.

2. பின் வரும் பெயர்ச் சொற்களை எட்டு வேற்றுமைகளிலும் அமைத்துக் கூறு :—

ஆசான், மரம், அண்ணன், நாம்.

# 4. சாணக்கியர்

மகத ராஜ்யத்தை மகாபத்ம நந்தர் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருக்கு நவநந்தர்கள் என்று அழைக்கப்பட்ட ஒன்பது குமாரர்களும், மூரா என்ற தாழ்ந்த சாதி மாது ஒருத்திக்குப் பிறந்த சந்திரகுப்தர் என்ற ஒரு குமாரரும் இருந்தார்கள். நவநந்தர்கள் சந்திரகுப்தரை வெறுத்தும் அவ மரியாதையாக நடத்தியும் வந்தார்கள். மகாபத்ம நந்தர் மட்டும் சந்திரகுப்தரை அன்பாய் நடத்தினர். ஆயினும் அவர் இறந்த பிறகு தம் கதி ஆபத்தாய் முடியும் என்பதைச் சந்திரகுப்தர் உணர்ந்து கொண்டார். நந்தருடைய முக்கிய மந்திரியாகிய இராக்ஷசர் என்ற அந்தணரும் சந்திரகுப்தருக்கு விரோதமாக நடந்தபடியால், பிற்காலத்தில் தமக்குத் துணையாக யாருமில்லாது போகக்கூடும் என்பது சந்திரகுப்தருக்குத் தெளிவாயிற்று.

நந்தருடைய மந்திரிகளில் ஒருவரான சாணக் கியரின் சிநேகத்தைச் சந்திரகுப்தர் நாடினர்; அவரிடம், தாம் நவநந்தர்களிடம் படும் அவமரியாதை யையும், தம் பயத்தையும் எடுத்துக் கூறினர். சாணக்கியர் அவருக்கு ஆறுதல் சொல்லி, தம் சொற் படி கேட்டால், எதற்கும் பயப்பட வேண்டியதில்லை என்று உறுதி கூறினர். இவர்களிருவரும் நண்பர்கள் ஆயினர்.

ஒரு நாள் அரண்மனையில் ஒரு விருந்து நடந்தது. முக்கியமான பிரபுக்களும் மந்திரிகளும் அதற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். சாணக்கியரும் அதற்கு அழைக்கப்பட்டு விருந்து மண்டபத்தை யடைந்தார். நவநந்தர்களில் ஒருவன் அவரை இன்னரென்று அறிந்து கொள்ளாமல் கர்வத்துடன்,

"தன்னைவிடச் சிறந்தோர் கூடியுள்ள இச்சபையில் இந்தப் பித்தன் எங்கிருந்து வந்தான்?" என்று கேட்டான். சாணக்கியர் கண்களில் தீப்பொறி பறக்க மண்டபத்தின் நடுவே நின்று கொண்டு தம் சிகையை அவிழ்த்துவிட்டு, "என் மதிப்பை அறியாத இந்த நந்தர்களை அழித்த பிறகுதான் இச் சிகையை முடிவேன்" என்று சபதம் செய்துவிட்டு விரைவாக அங்கிருந்து சென்றார்.

இந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற பிரதம மந்திரி இராக்ஷசர் சாணக்கியரை அழைத்து வந்து அவரிடம் மன்னிப்புக் கேட்கும்படி நவநந்தர்களுக்கு எடுத் துரைத்தார். ஆனால் கர்வம் மிகுந்த அரச குமாரர்கள் அவ்வாறு செய்ய இசையவில்லை.

சாணக்கியர் மகதநாட்டை விட்டுச் சென்ற விஷயத்தை அறிந்த சந்திரகுப்தர் உடனே தாமும் அந்நாட்டை விட்டு நீங்கி அவருடன் சேர்ந்து கொண்டார். இருவரும் பாஞ்சால நாட்டிற்குச் சென்றார்கள். அங்கே அச்சமயத்தில்தான் அலெக் ஸாந்தரின் படையெடுப்பு நிகழ்ந்துகொண்டிருந்தது. சந்திரகுப்தர் அலெக்ஸாந்தரைக் கண்டு, மகத ராஜ்யத்தை எதிர்ப்பதற்குத் தம்முடன் சேரவேண்டும் என்று கேட்டார். ஆனால் கிரேக்க வீரர்கள் தம் நாட்டுக்குத் திரும்பிவிட நிச்சயித்து விட்டனர். அவர் திரும்பிப் போனபின் சந்திரகுப்தர் வேறு சில அரசர் களின் உதவியைப் பெற்றார். இவர்களில் பர்வதகன் என்ற அரசன் முக்கியமானவன். இவன் இமாலயப் பிரதேசத்திலுள்ள ஒரு நாட்டுக்கு அரசன். இவன், தன் குமாரன் மலயகேது, சகோதரன் வைரோ தகன், ஆகிய இருவருடனும் ஒரு பெருஞ் சேனை யுடனும் சந்திரகுப்தரின் உதவிக்கு வந்தான்.

தாங்கள் ஜயிக்கும் நாட்டில் இவனுக்குப் பாதி கொடுப்பதாக சந்திரகுப்தர் இவனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இதற்குள் மகாபத்மநந்தர் மரணமடைந்து, நவ நந்தர்கள் மகதராஜ்யத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். சாணக்கியர் அந்நாட்டிலும் முக்கியமாக அதன் தலைநகரான பாடலிபுரத்திலும் தம் ஒற்றர்களை நிரப்பிவிட்டார். இராக்ஷசர் தமக்கு நம்பகமான ஆட்கள் என்று நினைத்த பலர் சாணக்கியருடைய ஒற்றர்களாயிருந்தார்கள்.

சந்திரகுப்தர் திரட்டி வந்த பெரிய சேனை வெகு விரைவிலே பாடலிபுரத்தை முற்றுகையிட்டது. முதல் தாக்குதலிலேயே கோட்டைச் சுவர் தகர்ந்து சேனு வீரர்கள் ஊருக்குள் நுழைந்தார்கள். நவநந்தர்கள் அரண்மனையிலேயே கொல்லப்பட்டார்கள். இராக்ஷசர் இரகசியமாய் வெளியேறி எஞ்சிய நந்த சைனியத்துடன் ஒரு காட்டுக்குள் ஒளிந்து கொண்டார். சந்திரகுப்தருக்குப் பணிந்துவிட அவர் விரும்பவில்லை. வெளியிலிருந்து கொண்டு சந்திரகுப்தரைக் கொல்ல ஏற்பாடுகள் செய்து வந்தார். அவர் தம்முடைய ஒற்றர்கள் சிலரை நகரத்துக்குள் வைத்திருந்தார். சந்திரகுப்தருடைய வேலையாட்களில் ஒருவன் இராக்ஷசருடைய ஒற்றன். சமயம் வாய்த்தபொழுது உணவிலோ, பானத்திலோ விஷத்தைக் கலந்துவிட இவன் எண்ணியிருந்தான். சந்திரகுப்தர் நகரத்திற்குள் நுழையும் பொழுது அவரைக் கொன்றுவிட ஏற்பாடு செய்வதாக ஒரு சிற்பி ஒப்புக் கொண்டிருந்தான். ஆனல் இந்த இரண்டு ஏற்பாடுகளையும் சாணக்கியர் தம் ஒற்றர்களின் உதவியால் அறிந்து கொண்டார்.

வெற்றி பெற்ற இரவில் நகருக்கு வெளியிலே ஒரு கூடாரத்தில் சந்திரகுப்தர் பர்வதகனுக்கு ஒரு விருந்தளித்தார். அச்சமயத்தில் இராக்ஷசருடைய ஒற்றனுயிருந்த வேலையாள் சந்திரகுப்தருடைய பானத்தில் விஷத்தைக் கலந்து கொணர்ந்து வைத்தான். அருகேயிருந்த சாணக்கியர், பர்வதகனுக்குத் தான் முதல் மரியாதை செய்யவேண்டுமென்று கூறி, அப்பானத்தை அவனுக்குக் கொடுக்கும்படி உத்தரவிட்டார். பர்வதகன் அதைக் குடித்த சிறிது நேரத்திற்கெல்லாம் மரணமடைந்தான். பானத்தைக் கொணர்ந்த வேலையாளை விசாரித்து உண்மையறிந்து அவனைக் கொலை செய்வித்தனர். சந்திரகுப்தர் பர்வதகனுடைய மரணத்திற்கு மிகவும் வருந்தினர். சாணக்கியர் தனித்திருக்கும் பொழுது அவரிடம், “ பானத்தில் விஷம் கலந்திருந்த விஷயம் உங்களுக்குத் தெரியும் போல் காண்கிறது. அப்படியிருந்தும் நீங்கள் ஏன் பர்வதகனுக்கு அதைக் கொடுக்கும்படி உத்தரவு செய்தீர்கள் ? ” என்று கேட்டார்.

சாணக்கியர், “ நான் அப்படிச் செய்யாமல், பானத்தில் விஷம் சேர்ந்திருந்தது எனக்குத் தெரியும் என்று காட்டிக் கொண்டால், இராக்ஷசர் செய்யும் சூழ்ச்சிகளை நான் கண்டு பிடித்துவிடுவது அவருக்குத் தெரிந்து விடும். உடனே அவர் விழிப்படைந்து விடுவார். இப்பொழுது தற்செயலாகப் பர்வதகனுக்கு அந்தப் பானம் கொடுக்கப்பட்டதாக இராக்ஷசர் எண்ணுவார். பர்வதகன் மரண மடைந்தது எனக்கும் வருத்தமாகத்தானிருக்கிறது. ஆனல் அதைத் தடுத்திருந்தால் நமக்கே பிற்காலத்தில் ஆபத்து ஏற்பட்டிருக்கும் ” என்ருர்.

பர்வதகன் மரணமடைந்தவுடன் அவனுடைய

குமாரன் மலயகேது ஓடி விட்டான். அவன் நேரே இராக்ஷசரிடம் சென்று அவருடன் சேர்ந்து கொண்டான். வைரோதகன் மட்டும் சந்திரகுப்தருடன் இருந்தான்.

வெற்றி பெற்ற சந்திரகுப்தர் மறுநாள் பாடலிபுரத்துக்குள் நுழைய ஏற்பாடாயிற்று. வரவேற்புக்காக நகர வாயிலில் ஒரு பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. அதை நிர்மாணித்த சிற்பிதான் இராக்ஷசருடைய ஒற்றன். அவன் அப்பந்தலில் ஓர் ஆணியைக் கழற்றினவுடன் அது கீழே விழுந்துவிடும்படியாக அமைத்திருந்தான். சந்திரகுப்தர் பந்தலில் நுழையும் பொழுது அப்படிச் செய்யக் காத்திருந்தான். சாணக்கியர் இவ்விஷயத்தை அறிந்திருந்தார். அவர் சந்திரகுப்தருடைய பட்டத்து யானை மேல் வைரோதகனை ஏற்றி, அவனே முதலில் நகரத்துக்குள் செல்லவேண்டுமென்று ஏற்பாடு செய்தார். அவ்வாறே வைரோதகன் பந்தலின் கீழ் வந்தான். சந்திரகுப்தருடைய பரிவாரங்கள் புடை சூழ, அவருடைய பட்டத்து யானைமேல் அமர்ந்து வந்த வைரோதகனைக் கண்டு அவனே சந்திரகுப்தர் என்று எண்ணிய சிற்பி ஆணியைக் கழற்றி விட்டான். மிக்க பளுவான அப்பந்தல் வைரோதகன் மேல் விழுந்து அவனை நசுக்கி விட்டது. சிற்பி உடனே கைது செய்யப்பட்டு மரண தண்டனையடைந்தான். சந்திரகுப்தர் இரண்டாம் முறை காப்பாற்றப்பட்டார்.

இதன் பிறகு சந்திரகுப்தர் பாடலிபுரத்தினுள் நுழைந்து ராஜ்யத்தை அரசு புரிந்தார். அவருக்கு அவ்வப்பொழுது ஏற்பட விருந்த ஆபத்துகளைச் சாணக்கியர் கண்டுபிடித்து நீக்கினார். பிறகு இராக்ஷசருக்கும் மலயகேதுவுக்கும் சச்சரவு ஏற்படும்படி

செய்து அவர்களைப் பிரித்து விட்டார். தனிமையில் விடப்பட்ட இராக்ஷசரைச் சாணக்கியர் தந்திரமாகச் சிறை செய்து அவரைச் சந்திரகுப்தருடைய மந்திரி யாகச் செய்தார். இதன் பிறகுதான் சாணக்கியர் அவிழ்த்து விடப்பட்ட தம் சிகையை முடிந்தார். நவ நந்தர்கள் எல்லோருமே மரண மடைந்து விட்டபடி யால், இனித் தாம் செய்வது ஒன்றுமில்லை என்றறிந்த இராக்ஷசர் சந்திரகுப்தருக்கு உண்மையாக உழைக்க நிச்சயித்து அவ்வாறே செய்தார். இவ்விரு மந்திரி களுடைய உதவியைக் கொண்டு சந்திரகுப்தர் வட இந்தியா முழுவதையும் வென்று சக்ரவர்த்தியாக ஆட்சி செய்தார்.

### பயிற்சி

I பொருள் கூறு :—

அவமரியாதை, கதி, தெளிவாயிற்று, நாடினர், பித்தன், நிரப்பி, நம்பகமான, தகர்ந்து, பணிந்துவிட, ஒற்றன், பானம், சிகை, சிற்பி, விழிப்புடை.

II உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது :—

அவமரியாதை, நாடினர், நம்பகமான, ஒற்றன், விழிப்படை.

III விடை கூறு :—

1. நவநந்தர்கள் சந்திரகுப்தரை எப்படி நடத்தினர்கள் ?

2. சந்திரகுப்தருக்கும் சாணக்கியருக்கும் எவ்வாறு நட்பு உண்டாயிற்று ?

3. நவநந்தர்கள் சாணக்கியரைப் பகைத்துக் கொண்ட வரலாறு என்ன ?

4. மகத நாட்டைவிட்டு வெளியேறிய சந்திரகுப்தர் யாருடைய உதவியை நாடினர் ? யாருடைய உதவி கிடைத்தது ?

5. சந்திரகுப்தர் பாடலிபுரத்தை எப்படிக் கைப்பற்றினர் ? நவநந்தர்களின் கதி யாதாயிற்று ?

6. இராக்ஷசர் சந்திரகுப்தருக்குப் பணியாமல் என்ன செய்தார்?

7. சந்திரகுப்தருக்கு விஷம் கொடுத்துக் கொல்வதற்குச் செய்த சூழ்ச்சி எப்படித் தோல்வியுற்றது?

8. சாணக்கியரால் சந்திரகுப்தர் இரண்டாம் முறையாக எவ்வாறு காப்பாற்றப்பட்டார்?

9. இராக்ஷசரைச் சந்திரகுப்தருடைய மந்திரியாகச் சாணக்கியர் எவ்வாறு செய்தார்?

IV இலக்கணம் :—

1. சொற்கள் பிறத்தற்கு அடியாக இருக்கும் பாகம் பகுதி. இது ஒரு சொல்லின் முதலில் அமைந்திருக்கும். இதற்கு முதல் நிலை என்றும் ஒரு பெயர் உண்டு.

பின்வரும் சொற்களில் பகுதிகளை மட்டும் கூறு :—

ஓடினான், வாழ்ந்தான், வருவான், அறிஞன்.

2. பகுபதங்களில் ஒரு சொல்லின் ஈற்றில் அமைந்திருக்கும் பாகம் விகுதி. இதற்கு இறுதி நிலை என்ற பெயருமுண்டு. விகுதியிலிருந்து, சொல்லின் திணை, பால், இடம் முதலியவற்றை அறியலாம்.

ஓடினான். (ஆன்—விகுதி)
செய்வாள். (ஆள்—விகுதி)
இறந்தது. (து—விகுதி)
அறிஞன். (அன்—விகுதி)

பின்வரும் சொற்களில் விகுதிகளை மட்டும் கூறு :—

படித்தான், தின்றது, கூறுவோம், வருவாய், நண்பர், செய்தீர்.

## 5. அச்சு எந்திரம்

தற்காலத்தில் புத்தகங்களும் பத்திரிகைகளும் மலிந்திருக்கின்றன. ஒரு பெரிய புத்தகசாலையிற் சென்று பார்த்தால் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அடுக்கப்பட்டிருக்கும். ஒரே புத்தகத்தைப் பல்லாயிரக் கணக்காக எளிதில் பிரதி செய்ய இக்காலத்தில் வசதி கள் இருக்கின்றன. அச்சு எந்திரமே இந்த நன்மைக் கெல்லாம் காரணமாகும்.

பண்டைக் காலத்தில் ஒரு நூலை எழுதி முடிக்க, மக்கள் எத்துணை சிரமப்பட்டார்கள் என்பதைக் கவனித்தால் தற்கால சாதனத்தின் பெருமை தெரிய வரும். அக்காலத்தில் நம் நாட்டினர் நூல்களை எழுத் தாணி கொண்டு பனையோலைகளில் எழுதினார்கள். கம்ப ராமாயணம் போன்ற பெரிய நூலாக இருந்தால் அதை ஓலையில் எழுதப் பல மாதங்கள் பிடிக்கும். முடிவில் ஒரு பிரதிதான் கிடைக்கும். இரண்டாம் பிரதி வேண்டுமானால், மற்றொரு முறை எல்லாவற் றையும் எழுதியே ஆகவேண்டும். தற்காலத்திலோ ஒரு முறை அச்சுக்கோத்து விட்டால், ஆயிரக்கணக் கான பிரதிகளைச் சில நாட்களுக்குள் தயார் செய்து விடலாம்.

இவ்வளவு உபயோகமான ஒரு முறை யாரால் எப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்வோம். சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பே அச்சு எழுத்துக்களை அமைத்துப் புத்தகங் களைத் தயாரிக்கும் ஒருமுறை சீனருக்குத் தெரிந்தி ருந்தது என்பதற்கு ஆதாரமிருக்கிறது. ஆனால் அவர்கள் உபயோகித்த முறைக்கும் தற்கால முறைக்கும் ஒரு முக்கிய பேத முண்டு. சீனர்கள்

ஒரு பக்கத்தில் உள்ளவிஷயத்தை ஒரே கட்டையில் செதுக்கி அச்சடித்தார்கள். ஒவ்வொரு எழுத்துக்கும் தனித்தனி அச்சுக்கள் செய்து அவைகளைக் கோத்துப் பின் அச்சடிக்கும் முறையை அவர்கள் கையாள வில்லை. ஒவ்வொரு எழுத்துக்கும் தனித்தனி அச்சுக் கள் இருப்பதில் அனுகூல முண்டு. அச்சுக்களைக் கோத்துக் காகிதங்களில் பதிப்பித்த பின், அவை களைக் கலைத்து விட்டுத் திரும்ப உபயோகிக்கலாம் அல்லவா? சீனருடைய முறையில் இப்படிச் செய்ய முடியாது.



பழைய மாதிரி அச்சு எந்திரம்

அச்சுக்களைக் கோத்து அச்சடிக்கும் முறையை முதன் முதலில் கண்டு பிடித்தவர் ஜோஹான்ஸ் கூடன் பர்க் என்ற ஜெர்மனியர் ஆவர். ஜெர்மனி

யிலுள்ள மெயின்ஸ் என்ற நகரில் கி. பி. 1440-ஆம் ஆண்டு முதல் இவர், தாம் கண்டுபிடித்த முறைப்படி புத்தகங்கள் அச்சடிக்கத் தொடங்கினர். கிறிஸ்தவ வேத நூலான பைபிள் தான் இவர் முதன் முதலில் பதிப்பித்த புத்தகமாகும். ஒரு யுத்தத்தில் மெயின்ஸ் நகரத்தை விரோதிகள் கைப்பற்றினர். அப்பொழுது அங்கே வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளிகள் ஐரோப்பாவில் வெவ்வேறிடங்களுக்கு ஓடினர்கள். அது முதல் இத்தொழில் பல இடங்களிலும் பரவியது. வில்லியம் காக்ஸ்டன் என்ற ஓர் ஆங்கிலேயர் ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தபொழுது அச்சுத் தொழிலைக் கற்றுக்கொண்டு, இங்கிலாந்து சென்று அங்கே ஆங்கில பாஷையில் பல நூல்களைப் பதிப் பிக்கத் தொடங்கினர்.

கூடன் பர்க் உபயோகித்த அச்சு எந்திரத்துக்கும் தற்கால எந்திரங்களுக்கும் எவ்வளவோ பேதமுண்டு. அப் பழைய எந்திரத்தில், கோத்த அச்சுக்களை இறுகப் பிடித்துக்கொள்ள உபயோகித்த சட்டம் மரத்தால் செய்யப்பட்டிருந்தது. ஒரு தோல் பந்தினல் மை தடவப்பட்டது. பிறகு சட்டத்தின் மேல் காகிதத்தை வைத்து ஒரு பலகையைத் திருகுகொண்டு அழுத் திக் காகிதத்தில் அச்சடிக்கப்பட்டது. தற்காலத்தில் இந்தப் பாகங்கள் எல்லாம் மிகவும் சீர்திருத்தம் அடைந்துள்ளன. சட்டம் இரும்பினல் செய்யப்பட் டுள்ளது. திருகைத் தளர்த்தினவுடன் பலகை தானே உயருவதற்கு ஒரு நெம்புகோல் இணைக்கப்பட்டிருக் கிறது. மை தடவும் உருளை, வேகமாக அச்சடிக்க வேண்டியதற்குத் தகுந்த சாதனங்கள் எல்லாம் தற் கால எந்திரங்களில் காணலாம்.

காகிதத்தை அச்சில் அழுத்துவதற்குத் தகட்டுப்

பலகையை உபயோகிப்பதற்குப் பதிலாக உருளையை உபயோகிப்பது சிறந்தது என்று கண்டுபிடிக்கப் பட்டது. அச்சுக்களைக்கொண்ட சட்டம் முன்னும் பின்னும் அசைந்துகொண்டிருக்கும். அப்பொழுது



உருளை அச்சு எந்திரம்

ஒரு புறத்தில் ஓர் உருளை அதன் மேல் மையைத் தடவும். மற்றொரு புறத்தில் ஓர் உருளை ஒரு காகிதத்தை அதன்மேல் அழுத்தி எடுக்கும். இது **உருளை அச்சு எந்திரம்** என்று பெயர் பெறும். மணிக்கு ஆயிரம் பிரதிகளுக்கு மேலாக இதைக் கொண்டு பதிப்பிக்க லாம். இதை முதலில் கண்டுபிடித்தவர் **கோனிக்** என்பவர் ஆவர்.

பெரிய தினசரிப் பத்திரிகாலயங்களில் நுழைந் தால் அங்குள்ள அச்சு எந்திரங்கள் மேற் கூறியவற் றைக் காட்டிலும் மிக்க சீர்திருத்தம் பெற்றவை என் பதை அறியலாம்.

கையால் அச்சுக் கோக்கும் முறை பண்டைக் கால முறையாகி விட்டது. "லைனோ டைப்" "மானோ

டைப்'' என்ற எந்திரங்களைக் கொண்டுதான் பெரிய பத்திரிகாலயங்களில் அச்சுக் கோக்கின்றனர். டைப் அடிக்கும் எந்திரங்களில் எழுத்துக்களை அடிப்பது போல் லைனோ டைப் எந்திரத்திலும் அடிப்பார்கள். பள்ளமுள்ள வார்ப்படம் போன்ற ஒரு வகை எழுத்



'லைனோடைப்' அச்சுக்கோக்கும் எந்திரம்

துக்கள் வரிசையாக வந்து அமையும். ஒரு வரி அடித்து முடிந்ததும் அந்த எந்திரமே இந்த எழுத்துக் களின்மேல் அச்சு உலோகத்தை உருக்கி ஊற்றிவிடும். அது குளிர்ந்ததும் பார்த்தால் ஒரு வரி முழுவதும் ஒரே கட்டியாய் எழுத்துக்கள் சேர்ந்திருக்கும். இப் படித் தயாரித்த வரிகளை யெல்லாம் அடுக்கி ஒரு பக்கம்

முடிந்ததும், அதைக்கொண்டு ஒரே உருளையில் இந்த அச்செழுத்துக்கள் அமையும்படி தயார் செய்வார்கள். இதே போல் பக்கத்திற்கு ஒரு உருளை தயார் செய்யப் படும். இவற்றை யெல்லாம் ஒரு பெரிய 'ரோட்டரி' எந்திரத்தில் மாட்டுவார்கள். அதில் நீண்ட காகிதம் உருளைகள் போல் சுற்றப்பட்டு சுழலக்கூடிய விதத்தில் வைக்கப்பட்டிருக்கும். எந்திரத்தை ஓட்டும்பொழுது காகித உருளைகள் பிரிந்து வேகமாகச் செல்லும்; அப்பொழுது காகிதங்கள் அச்சு உருளையில் உராய்ந்து



தினசரிப் பத்திரிகை அச்சடிக்கும் எந்திரம்

செல்வதால் அவை அச்சடிக்கப்படும். அச்சு உருளை களும் வேகமாகச் சுற்றிக்கொண்டே யிருக்கும். காகி தத்தின் இரண்டு பக்கங்களிலும் ஒரே சமயத்தில் அச்

சடிக்கும்படி அச்சு உருளைகள் அமைக்கப்பட்டிருக் கும். மை தடவுவதும் இதே வேகத்தில் நடந்துகொண் டிருக்கும். அச்சடித்த காகிதங்கள் அறுத்து மடிக்கப் பட்டு வெளியில் வேகமாகத் தள்ளப்படும். ஒரு மணிக் குச் சுமார் 40,000 பிரதிகள் வீதம் இத்தகைய எந் திரம் அச்சடிக்கு மென்றால் தினசரிப் பத்திரிகை களுக்கு இதிலுள்ள அனுகூலத்தை நீங்களே ஊகித் துக் கொள்ளலாம்.

பல வர்ணங்களுடன் கூடிய படங்களையுடைய புத்தகங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவற்றை எவ்வாறு அச்சடிக்கிறார்கள்? "மூவர்ண முறை" என்ற முறைப்படி இவை அச்சடிக்கப்படுகின்றன. சிவப்பு, நீலம், மஞ்சள் என்ற மூன்று வர்ணங்களும் **ஆதார வர்ணங்கள்** என்று சொல்லப்படும். இவற் றைப் பலவிதங்களில் கலந்தால் மற்ற எல்லாவித வர் ணங்களையும் உண்டாக்கலாம். உதாரணமாக நீலம், மஞ்சள் என்ற இரண்டு வர்ணங்களையும் கலந்தால் பச்சை தோன்றுவதையும், சிவப்பு, மஞ் சள் என்ற இரண்டையும் கலந்தால் கிச்சிலி (ஆரஞ்சு) தோன்றுவதையும் நீங்களே பரிசோதித்து அறிய லாம். ஒரு வர்ணப் படத்தில் மேற்கண்ட மூன்று வர்ணங்களும், எந்த இடத்தில் எவ்வளவில் இருக்க வேண்டும் என்பதை நிர்ணயித்துத் தனித் தனியே மூன்றுவித அச்சு (பிளாக்) செய்வார்கள். இவற் றைக் கொண்டு ஒரே காகிதத்தில் மூன்று முறை அச்சடித்தால் அழகிய வர்ணப் படம் கிடைக்கும். இம்மாதிரி முறையில் அச்சுக்கள் தயாரிப்பதற்கு அதிகத் திறமை வேண்டும்.

அச்சு எந்திரத்தில் ஏற்பட்டுள்ள சீர்திருத்தங் களே பத்திரிகைகளும், புத்தகங்களும் இக்காலத்தில்

எங்கும் பரவியிருப்பதற்கு முக்கிய காரணமாகும். இதனால் எல்லா மக்களும் கல்வி பயில வசதி ஏற்பட்டிருக்கிறது.

## பயிற்சி

**I பொருள் கூறு :—**

பிரதி செய்ய, எத்துணை, பேதம், கையாளவில்லை, பத்திரிகாலயம், வார்ப்படம், உராய்ந்து, அனுகூலம், வர்ணம்.

**II சொந்த வாக்கியங்களில் அமைத் தெழுது :—**

பிரதி செய், கையாளு, உராய்ந்து, அனுகூலம்.

**III விடை கூறு :—**

1. அச்சு எந்திரம் இல்லாத காலத்தில் நம் நாட்டில் நூல்கள் எவ்வாறு எழுதப் பெற்றன ?
2. சீனர்கள் பண்டைக் காலத்தில் உபயோகித்த முறைக்கும் தற்கால முறைக்கும் உள்ள முக்கிய வித்தியாசம் என்ன ?
3. அச்சுக்களைக் கோத்து அச்சடிக்கும் முறையைக் கண்டு பிடித்தவர் யார் ? அவர் அச்சிட்ட முதல் நூல் எது ?
4. கூடன்பர்க் உபயோகித்த அச்சு எந்திரத்தின் பாகங்கள் பிற்காலத்தில் எவ்வாறு சீர்திருத்தம் அடைந்தன ?
5. கோனிக் என்பவர் கண்டுபிடித்த அச்சு எந்திரம் எது ? அதன் சிறப்பு யாது ?
6. லைனோ டைப் எந்திரத்தில் அச்சுக் கோப்பது எப்படி ?
7. ரோட்டரி எந்திரத்தில் மணிக்கு எத்தனை பிரதிகள் வரை அச்சடிக்கலாம் ?
8. ஆதார வர்ணங்கள் என்றால் என்ன ? அவற்றைத் தக்கபடி கலந்தால் பிற நிறங்கள் உண்டாவதற்கு உதாரணங்கள் கொடு.
9. வர்ணப் படங்கள் எப்படி அச்சடிக்கப்படுகின்றன ?
10. அச்சு எந்திரங்களின் முன்னேற்றத்தால் ஏற்பட்டுள்ள அனுகூலங்களை எழுது.

**IV இலக்கணம் :—**

1. பின் வரும் சொற்களைச் சேர்த்து எழுது :

கல் + எறிந்தான் ; நெல் + அரிசி ;
மெய் + உணர்வு ; கள் + அமுதம் ;
சீர் + அழி ; ஊர் + ஆலயம்.

2. பின்வரும் சொற்களில் உள்ள பகுதி, விகுதி, இடைநிலைகளைக் கூறு :—

இருக்கின்றன, நுழைந்தான், ஓடுவான், வருகிறாள்.

## 6. சீதக்காதி வள்ளல்

தமிழ் நாட்டில் வாழ்ந்த முஸ்லிம்களில் சிலர் சிறந்த தமிழ்ப் புலவர்களாகவும் சிலர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்த வள்ளல்களாகவும் புகழ் பெற்றுள்ளனர். உமறுப் புலவர் பாடிய 'சீருப் புராணம்' ஒரு பெருங் காப்பியத்தின் இலக்கணங்கள் அமையப் பெற்றது; முகம்மது நபிகளின் வரலாற்றைக் கூறுவது. சவ்வாதுப் புலவர் 'இராஜராஜேஸ்வரி பஞ்சரத்னம்', 'முகையதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ்' போன்ற பிரபந்தங்களைப் பாடியுள்ளார். முஸ்லிம் வள்ளல்களில் தலை சிறந்தவர் **சீதக்காதி** என்று தமிழ் மக்களால் கொண்டாடப் பெற்ற **ஷெய்க் அப்துல் காதர்** ஆவர்.

வங்காளக் குடாவை அடுத்த தமிழ் நாட்டின் கரையில் **காயல், கீழ்க்கரை, நாகூர், நாகப்பட்டினம், காரைக்கால்** முதலிய துறைமுகங்கள் பிரசித்தமாயிருந்தன. இவற்றில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பாலோர் 'மரக்காயர்' என்ற பட்டம் தரிக்கும் வியாபாரிகள் ஆவர். கப்பல்களில் வரும் சரக்குகளை வாங்குவதும், உள்நாட்டில் சரக்கு வாங்கிக் கப்பல்களில் ஏற்றுவதும் இவர்களுடைய வியாபாரத் தொழில். இத்தகைய மரக்காயர் குடும்பம் ஒன்றில் கீழ்க்கரை என்ற துறைமுகப் பட்டினத்தில் சுமார் 320 ஆண்டுகளுக்கு முன் நம் வள்ளல் சீதக்காதி பிறந்தார். இவர் இளமையில் நன்கு கல்வி கற்று, நல்லொழுக்கமும் அமையப் பெற்று விளங்கினர். தக்க வயது வந்ததும் குடும்ப வியாபாரத்தையே தாமும் மேற்கொண்டு பெரும்பொருள் ஈட்டினர்.

அக்காலத்தில் **ஷெய்க் சதக்கத்துல்லா** என்ற முஸ்லிம் துறவி சிறந்த ஞானியாகவும் முஸ்லிம் மத நூல்களில் வல்லுநராகவும் விளங்கி யாவராலும் மதிக்கப்பெற்றிருந்தார். அவருக்குச் சீதக்காதியிடம் நட்பு ஏற்பட்டது. அப்பொழுது டில்லி பாதுஷாவாக இருந்த **ஔரங்கசீப்,** வங்காள ராஜ்யத்திற்குக் கவர்னராக யாரை நியமிப்பது என்று ஆலோசிக்கும் பொழுது, சதக்கத்துல்லா நம் சீதக்காதி அப்பதவிக்குத் தக்கவர் என்று பாதுஷாவிடம் கூறினர். இத் துறவியிடம் பெரு மதிப்பு வைத்திருந்த ஔரங்கசீப் அவ்வாறே சீதக்காதியை வங்காளக் கவர்னராக நியமித்தார். சீதக்காதி பாதுஷாவின் விருப்பப்படி அப்பதவியை ஏற்றுச் சிறிது காலம் வங்காள ராஜ்யத்தை நிர்வாகம் செய்தார். ஆனல் அப்பிரதேசத்தின் சீதோஷ்ண நிலை இவருடைய தேகத்துக்கு ஒவ்வாமையால், இவர் அப்பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டுத் தம் ஊராகிய கீழ்க்கரைக்கே வந்து தம் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தார்.

ராமநாதபுர ராஜ்யத்தின் அரசராக அக்காலத்தில் விளங்கியவர் **விஜயரகுநாத சேதுபதி** ஆவர்; அவருக்குக் ‘ கிழவன் சேதுபதி ’ என்றவொரு பெயருமுண்டு. இவர் சீதக்காதியின் குணச் சிறப்புக்களை அறிந்து, அவரை அழைத்துத் தம் ஆலோசனையாளர்களில் ஒருவராகவும் நண்பராகவும் கொண்டார். கிழவன் சேதுபதி இவரைத் தம் தம்பியாகவே மதித்து நடத்தியமையால் ‘ பெரிய தம்பி மரக்காயர்,’ என்ற பெயரும் இவருக்கு ஏற்பட்டது.

இவ்வாறு அரசர்களாலும் நன்கு மதிக்கப் பெற்ற சீதக்காதி, தம்மை அண்டின புலவர்களை ஆதரித்தார்; தம்மிடம் யாசித்த எல்லோருக்கும் இல்லை என்னது

பொருள் வழங்கினர். இவருடைய நட்பைப் பெற்றிருந்த தமிழ்ப் புலவரான படிக்காசுத் தம்பிரான் பாடிய சில செய்யுட்களிலிருந்து இவருடைய வண்மை தெற்றெனப் புலப்படும்.

ஒரு சமயம் பாண்டிய நாட்டில் மழையின்றிக் கொடிய பஞ்சத்தினுல் மக்கள் அவதியுற்றனர். அக்காலத்தில் சீதக்காதி தம் பொருளை ஏழைகளுக்கு வாரி வழங்கி பஞ்சத் துன்பத்தைப் பெரிதும் குறைத்தார். இவ்வருஞ்செயலை வியந்து, படிக்காசுத் தம்பிரான் ஒரு பாடலை அருளிச் செய்தார் :

ஓர்தட் டிலேபொன்னும் ஓர்தட் டிலேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத் திலும்தங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினும்தட்டு வாராம லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.

சீதக்காதி வள்ளலுக்கு அந்திம தசை அணுகியது. சில நாட்களில் தமது ஆயுள் முடிந்துவிடுமென்பதை அவர் உணர்ந்தார். தாம் அணிந்திருந்த மோதிரத்துடன் தம்மை அடக்கம் செய்யும்படி தமது உழையிருந்தோரை அவர் கேட்டுக் கொண்டார். அவர் ஆன்மா விண்ணுலகடைந்தபின், அவரது வேண்டுகோளின்படியே சமாதிக்குழியில் கைமோதிரத்துடன் உடல் அடக்கம் செய்யப் பெற்றது. தமிழ்ப் புலவர்களும், அவரது வண்மையின் பயனைப் பெற்றவர்களும் பிறரும் சொல்லொணுத் துயருற்றனர்.

சீதக்காதியிடம் நட்புரிமை பூண்டிருந்த படிக்காசுத் தம்பிரான் சில நாட்களுக்குப் பிறகு அவ்வூருக்கு வந்தார். அப்பொழுதுதான் தம் அன்புக்குரிய வள்ளல் இறைவன் திருவடி சேர்ந்த செய்தியைக் கேள்வியுற்ருர். சீதக்காதியின் சமாதிக்குச்

சென்று தமது துக்கத்தை இரு செய்யுட்களின் மூல மாக வெளியிட்டார். "சீதக்காதியின் மறைவால், தமிழ்ப் பாவலர் தம்மை ஆதரித்த வள்ளலை இழந்து விட்டார்கள். இனி அவர்கள் ஏழ்மையால் வாடுவார் கள். இனி யார் இருந்தால் என்ன? சீதக்காதி இறந்தபோதே, ஆதரிப்பாரின்மையால், தமிழ்ப் புல மையும் செத்து விட்டது," என்ற கருத்துடையதா யிருந்தன அச் செய்யுட்கள்.

"தேட்டாளன் காயல் துரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத் தான்தமிழ்ப் பாவலரை
ஓட்டாண்டி யாக்கி அவர்கள்தம் வாயில் ஒருபிடிமண்
போட்டான் அவனும் ஒளித்தான் சமாதிக் குழிபுகுந்தே."

"பூமா திருந்தென்ன புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னுவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்டபோதே புலமையும் செத்ததுவே."

இச் செய்யுட்களை அவர் பாடி முடித்ததும் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. சமாதி பிளந்து, மோதிர மணிந்த கை மேலே உயர்ந்து நின்றது. அருகிருந் தோர் இதைக் கண்ணுற்று அதிசயித்தனர். தம் உடலைப் புதைத்த பின் படிக்காசுத் தம்பிரான் வரு வார்; அவருக்குக் கொடுக்கப் பொருள் வேண்டும் என்று கருதியே சீதக்காதி தமது கைமோதிரத்தைக் கழற்ற வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார் என்று மக்கள் கருதினர். "செத்தும் கொடுத்தான் சீதக் காதி" என்று தமிழ் நாட்டில் வழங்கும் முதுமொழி இவ்வற்புத நிகழ்ச்சியைக் குறிக்கின்றது.

## பயிற்சி

I பொருள் கூறு :—

பெருங்காப்பியம், பிரபந்தம், பிரசித்தம், சரக்கு, ஈட்டினர், வல்லுநர், பெருமதிப்பு, சீதோஷ்ண நிலை, ஒவ்வாமையால், ராஜிநாமா, மதிக்கப்பெற்ற, தெற்றெனப் புலப்படும், வாரிவழங்கி, ஒக்கவிற்கும், கார்தட்டிய பஞ்சகாலம், தட்டு வராமல், மார் தட்டிய, அந்திமதசை, ஆயுள், உழையிருந்தோர், தேட்டாளன், ஓட்டாண்டியாக்கி, பூமாது, புவிமாது, நாமாது, கோமான், அற்புதம்.

II சொந்த வாக்கியங்களில் உபயோகி :—

ஈட்டு, தெற்றென, ராஜிநாமா, வல்லுநர்.

III விடை கூறு :—

1. உமறுப் புலவர், சவ்வாதுப் புலவர் ஆகியோர் இயற்றிய முக்கிய நூல்கள் யாவை?

2. சீதக்காதி வள்ளல் எத்தகைய குடும்பத்தில் பிறந்தார்? பிறந்த ஊர் எது?

3. சீதக்காதி வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டது எவ்வாறு? அப்பதவியை ஏன் ராஜிநாமாச் செய்தார்?

4. பெரியதம்பி மரக்காயர் என்ற பெயர் சீதக்காதிக்கு எதனால் ஏற்பட்டது?

5. கொடிய பஞ்சகாலத்தில் சீதக்காதி வள்ளல் மக்களுக்கு எவ்வாறு உதவி செய்தார்?

6. சீதக்காதி மரணமடையுமுன் தம் சடலத்தை எவ்வாறு அடக்கம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்?

7. படிக்காசுத் தம்பிரான், சீதக்காதியின் சமாதிமுன் நின்று கூறிய பாடல்களுக்குப் பதவுரை எழுது.

8. "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்ற பழமொழி தோன்றுவதற்குக் காரணமான நிகழ்ச்சியைக் கூறு.

IV இலக்கணம் :—

பகுபதங்களில் பகுதி விகுதிகளைத்தவிர இடைநிலை என்ற ஓர் உறுப்பும் பெரும்பாலும் இருக்கும். வினைச் சொற்களில் வரும் இடைநிலைகள் காலங்காட்டும். பெயர்ச் சொற்களிலும் இடைநிலை இருக்கலாம்.

1. ஓடுகின்றான் : ஓடு + கின்று + ஆன். (கின்று – இடைநிலை)
2. செய்தான் : செய் + த் + ஆன் (த்—இடைநிலை)
3. இருப்பான் : இரு + ப் + ஆன் (ப் —இடைநிலை)
4. அறிஞன் : அறி + ஞ் + அன் (ஞ்—இடைநிலை)

முதல் மூன்று சொற்களும் வினைமுற்றுக்கள். இவ்ற்றில் வந்துள்ள இடைநிலைகள் முறையே நிகழ்காலம், இறந்த காலம், எதிர்காலம் காட்டி நிற்பதை அறியலாம். அறிஞன் என்ற பெயர்ச் சொல்லிலுள்ள இடைநிலை காலங்காட்டவில்லை. இது பெயரிடை நிலை எனப்படும்.

கீழ்க்கண்ட சொற்களில் உள்ள இடைநிலைகளைக் கூறு :—

செத்தான், படிப்பான், குறைகிறது, செல்வாய், செல்கின்றான், இளைஞன்.

# 7. ஜாம்ஷெட்ஜி டாடா

ஆலைத் தொழில்கள் மிகுந்துள்ள நாடுகள் செல்வ நிலையிலும் நாகரிகத்திலும் சிறந்திருப்பதைக் காண்கிறோம். இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் முதலியன இத்தகைய நாடுகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. இரும்பும் நிலக்கரியும் அதிகமாகக் கிடைக்கும் நாடுகளில்தான் ஆலைத் தொழில்கள் ஏற்பட்டு வளர்ச்சியடைய முடியும். நம் நாட்டில் சில பிரதேசங்களில் இக்கனிப் பொருள்கள் அகப்படுகின்றன. எனவே இரும்பு உற்பத்தித் தொழிற் சாலைகளைப் பெருக்கி, பலவித எந்திரங்களை ஆக்கவும், அவற்றின்மூலம் ஆலைத் தொழில்களை வளர்க்கவும் நம் நாட்டில் வசதிகள் உண்டு. சென்ற நூற்றாண்டிலேயே, நம் நாடு அந்நிய ஆதிக்கத்தின் கீழ் அவதியுற்றிருந்த பொழுதே, ஒருவர் இங்கு பல ஆலைத் தொழில்களை ஸ்தாபித்து, இரும்பு உருக்குத் தொழிற்சாலையையும் தொடங்கினார் என்றால் அவரை நம் நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்த தேசத் தொண்டர் எனவே கருத வேண்டும். அப்பெரியார் **ஜாம்ஷெட்ஜி டாடா** என்பவர் ஆவர்.

நஸர்வாஞ்ஜி டாடா என்பவர் பார்ஸி புரோகித குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் பரோடா சமஸ்தானத்திலுள்ள நவ்சாரி என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார். இவருடைய மைந்தராக 1839-ல் பிறந்தவரே ஜாம்ஷெட்ஜி டாடா.

ஜாம்ஷெட்ஜி பதின்மூன்று வயதுவரை தம் ஊரிலேயே கல்வி கற்றபின் பம்பாயிலிருந்த எல்பின்ஸ்டன் கல்லூரியில் உயர்தரக் கல்வி பயின்றார். அக்

காலத்தில் ஹீராபாய் என்ற மாதரசிக்கும் இவருக்கும் திருமணம் நிறைவேறியது.

ஜாம்ஷெட்ஜியின் தந்தையார் நஸர்வாஞ்ஜி புரோகித குடும்பத்தைச் சேர்ந்தவரெனினும், மற்றப்

ஜாம்ஷெட்ஜி டாடா

பார்ஸியரைப் போலவே வியாபாரம் செய்து பணம் தேடுவதிலும் கருத்துக் கொண்டிருந்தார். ஜாம் ஷெட்ஜி தம் படிப்பு முடிந்ததும், தந்தையாருடன் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டார்.

நஸர்வாஞ்ஜி வேறு இரு கூட்டாளிகளையும் சேர்த்துக் கொண்டு சீனாவுடன் வியாபாரம் தொடங்கினார் ; பருத்தியும் அபினியும் அந்நாட்டிற்கு அனுப்பப் பெற்றன. இந்த வியாபாரத்தை யொட்டி ஜாம்ஷெட்ஜி சீனாவுக்குச் சென்றார். அங்கே 'மார்க்கட்' நிலவரங்களை நன்கு அறிந்துகொள்ள இவருக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அங்கிருந்து திரும்பியபின் இங்கிலாந்து சென்று அங்கு இந்தியப் பருத்திக்குக் கிராக்கி ஏற்பட வழிவகை செய்தார். ஒரு சமயம் பொருளாதார நெருக்கடியினால், டாடாக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது. ஆனால் சிறிது காலத்திற்குள்ளேயே பணக் கஷ்டத்தைச் சமாளித்து விட்டனர். இந்திய ராணுவத்துக்கு உணவு உடை முதலிய பொருள்கள் சேர்த்துக் கொடுக்கும் குத்தகை இவர்களுக்குக் கிடைத்தமையால் அதில் பல லட்சக் கணக்கான ரூபாய் லாபம் கிடைத்தது. இதற்குப் பிறகு நஸர்வாஞ்ஜி வியாபாரத்திலிருந்து விலகிக் கொண்டு, ஜாம்ஷெட்ஜியிடம் எல்லாப் பொறுப்புக்களையும் ஒப்படைத்து விட்டார்.

ஜாம்ஷெட்ஜிக்குப் பஞ்சு நூற்பு ஆலைகளும், நெசவு ஆலைகளும் நிறுவி நடத்த வேண்டுமென்னும் அவா இருந்தது. முதலில் 'அலெக்ஸாண்டிரியா மில்' என்ற பஞ்சாலை ஒன்றை ஸ்தாபித்துச் சிறிது காலம் நடத்தினார். அப்பொழுது ஆலையை நிர்வகித்து நடத்தும் பொறுப்புக்களை நன்கு உணர்ந்து கொண்டார். அந்த ஆலையில் நல்ல லாபம் கிடைத்தமையால், அதை விலைக்கு வாங்கிக் கொள்ளச் சிலர் முன் வந்தனர். அவர்களில் ஒருவருக்கு ஜாம்ஷெட்ஜி அந்த ஆலையை விற்று விட்டார்.

இங்கிலாந்தில் லங்காஷயர் பிரதேசத்தில் தான்

பருத்தி நெசவு ஆலைகளும் நூற்கும் ஆலைகளும் அதிகம். அங்கு மற்றொரு தடவை சென்றார் டாடா ; அந்த ஆலைகளில் தொழில் நடைபெறும் விதத்தையும், நவீன எந்திரங்களையும் நேரில் கண்டறிந்தார். பிறகு இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். மத்திய இந்தியாவில் பருத்தி விளையும் பிரதேசம் உண்டு. எனவே அங்கு மைய நகரமான நாகபுரியில் ஒரு நூற்பு நெசவு, ஆலையை நிறுவ டாடா ஏற்பாடுகள் செய்தார். 1877-ல் 'எம்ப்ரஸ் மில்' என்ற நூற்பு, நெசவு ஆலை திறக்கப்பட்டது. சுமார் பத்து வருஷங்கள் இது லாபகரமாக வேலை செய்தது. ஆனால் முரட்டு ரகத் துணிகளே இதில் உற்பத்தி செய்யப்பட்டன.

மெல்லிய ரகத் துணிகளுக்கு நாட்டில் எப்பொழுதும் கிராக்கி உண்டு. இவை லங்காஷயர் ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு இங்கு இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றுடன் போட்டியிடுவதற்கு, இந்தியாவிலேயே ஒரு மில் அமைக்க வேண்டுமென டாடா எண்ணங் கொண்டார். அப்பொழுது பம்பாயில் ஒரு பழைய நெசவு ஆலை ஏலத்திற்கு வந்தது. டாடா அதை வாங்கிச் சில பாகங்களைப் புதுப்பித்து உபயோகிப்பது லாபமாக இருக்குமென்று கருதினார். 12 லட்சம் ரூபாய்க்கு அதை ஏலத்தில் எடுத்தார். பிறகு தான் அது மிகப் பழைய எந்திரங்களால் அமைந்ததென்று தெரியவந்தது. தொட்டதை எல்லாம் புதுப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வேறு யாராயிருந்தாலும் மனமுடைந்து போயிருப்பார். டாடா நெஞ்சம் கலங்கவில்லை. 50 லட்சம் ரூபாய் செலவழித்து அதைச் செம்மையாக்கி, 'ஸ்வதேசி மில்' என்ற பெயரைச் சூட்டினார். உயர்ந்த ரகத் துணிகள் தயாரிக்க அந்த ஆலை பயன்பட்டது.

டாடா ஆலேகளை நிறுவித் துணிகளை உற்பத்தி செய்வதுடன் நில்லாமல், உலக நாடுகளில் பல இடங் களிலும் தம் ஏஜண்டுகளை அனுப்பி, தம் ஆலேத் துணிகளுக்குக் கிராக்கி ஏற்படச் செய்துவந்தார். இதனால் இவருடைய ஆலேகளுக்கு எப்பொழுதும் வேலே இருந்துவந்தது. சரக்குகளுக்குக் கிராக்கி ஏற்பட்டால் தானே மேன்மேலும் உற்பத்தியைப் பெருக்கலாம்? சில ஆண்டுகளுக்குள் டாடா மிகுந்த செல்வம் திரட்டிவிட்டனர். எம்ப்ரஸ்மில், ஸ்வதேசிமில் என்ற இரண்டிலும் பங்குத் தொகை சேர்ந்தவர் களுக்கு நல்ல லாபம் கிடைத்தது.

ஜாம்ஷெட்ஜி டாடாவுக்கு **தோரப்ஜி டாடா, ரத்தன்ஜி டாடா** என்ற இரு குமாரர்கள் இருந் தார்கள். இவர்கள் கல்வியிலும் வியாபார நுணுக்கங் களிலும் பூர்ண அறிவைப் பெற்று, தம் தந்தைக்கு உதவியாக உழைக்க ஆரம்பித்தார்கள். டாடா கம்பெனியின் ஊழியத்தில் **ஆர். டி. டாடா** என்ற ஒருவர் இருந்தார். அவர் ஜாம்ஷெட்ஜிக்கு உறவினர். தம் நிர்வாகத் திறமையால் அவர் உயர்பதவிகளை அடைந்து, முடிவில் டாடா கம்பெனியில் ஒரு பாகஸ்த ராகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஜாம்ஷெட்ஜி டாடாவுக்கு இப்படித் திறமை வாய்ந்த சகாக்கள் கிடைத்தமையால் தான், அவரது முயற்சிகள் வெற்றி பெற்றன என்று கூறலாம்.

ஜாம்ஷெட்ஜி டாடாவின் ஒரு முக்கிய நோக்கம் இந்தியாவில் ஆலேத்தொழில்கள் அபிவிருத்தி அடைய வேண்டுமென்பது. இதற்காக, ஒரு பெரிய இரும்பு உருக்குத் தொழிற்சாலே ஏற்படுத்தவேண்டு மென்றும் விஞ்ஞானத் துறையில் ஆராய்ச்சிகள் செய்ய ஒரு ஸ்தாபனம் அமைக்க வேண்டுமென்றும் பம்பாயில்

மின்சார உற்பத்தித் திட்டம் அமைக்க வேண்டு மென்றும் இவர் கருதினர். விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் பங்களூரில் அமைக்கப்பட்டது. அதற்கு மைசூர் மகாராஜா 300 ஏக்கர் நிலமும் கட்டடத்திற்குச் சில லட்சம் ரூபாய்களும் கொடுத்து உதவினர். ஆண்டுதோறும் அதற்கு ஆகக்கூடிய செலவான 2 லட்சம் ரூபாயை டாடா கம்பெனியிலிருந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபிக்க வேண்டு மென்னும் கருத்துடன், இந்தியாவில் எங்கு நல்ல இரும்புதாதுப் பொருள் கிடைக்கு மென்பதைப் பற்றி டாடா ஆராய்ச்சிகள் செய்து வந்தார். இவ்விஷயத்தில் அரசாங்கத்தின் உதவியையும் அவர் கோரினர். ஆனல் அரசாங்கத்தார் அவருக்கு உதவ முன்வரவில்லை. டாடாவின் மூத்த குமாரர் செய்த முயற்சியின் பயனுக, மௌர் பஞ்சு என்ற சமஸ்தானத்தில் நல்ல இரும்புச் சுரங்கம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. பிறகு டாடா கம்பெனியார், அங்கு பல சதுரமைல் பரப்புள்ள இடத்தைக் குத்தகைக்கு எடுத்து, இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவ ஏற்பாடுகள் செய்தனர். 1907-ல், அதாவது ஜாம்ஷெட்ஜி டாடா காலமான பிறகுதான், இத் தொழிற்சாலை இரும்பு உருக்கி எடுக்கும் வேலை தொடங்கியது. தந்தையாரின் அவாவை அவருடைய குமாரர்கள் பூர்த்தி செய்துவைத்தார்கள். இதேபோல் மேற்குத் தொடர்ச்சிமலை நீர்வீழ்ச்சியிலிருந்து மின் சாரசக்தி தயாரித்து பம்பாய் நகருக்கு வினியோகம் செய்வதற்கு டாடா ஏற்பாடுகளைத் தொடங்கினர். அந்த ஏற்பாட்டையும் அவருடைய குமாரர்கள் முற்றுவித்தனர்.

தற்காலத்தில் இந்தியாவில் பல ஆலேத் தொழில்கள் தோன்றி யிருப்பதற்கு ஜாம்ஷெட்ஜி டாடாவே வழி காட்டியாக இருந்தார். இவரைப் பார்த்து மேலும் பல செல்வர்கள் இவ்விதத் தொழில் வளர்ச்சிகளில் ஈடுபட முன்வந்தனர். தம் தொழிலில் டாடா அளவற்ற செல்வம் திரட்டினுர். ஆனுல் எளிய வாழ்க்கையையே இவர் மேற்கொண்டிருந்தார். தம் செல்வத்தில் பெரும்பகுதியை நாட்டின் நலனுக்காகப் பல நன்கொடைகளுக்கு எழுதிவைத்தார். பங்களூர் விஞ்ஞான ஆராய்ச்சி நிலேயம் இத்தகைய நன்கொடை யொன்றினுல் நடைபெறுகிறது. 40 வருஷ காலம் சலியாத உழைப்புடன் வாழ்ந்த இவர் 1904-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். ஆனுல், அவருடைய நோக்கங்களே டாடா கம்பெனியார் இன்றும் நிறைவேற்றி வருகின்றனர்.

## பயிற்சி

I பொருள் கூறு :—

கனிப்பொருள், மார்க்கட் நிலவரம், வழிவகை செய், கிராக்கி, பொருளாதார நெருக்கடி, குத்தகை, பொறுப்பு, பஞ்சாலே, நூற்பு ஆலே, நெசவு ஆலே, நவீன, ரகம், மனமுடைந்து, செம்மையாக்கி, பாகஸ்தர், சகா, முற்றுவி, வழிகாட்டி, நன்கொடை, சலியாத, நீத்தார்.

II உன் சொந்த வாக்கியங்களில் அமைத் தெழுது :—

பொறுப்பு, மனமுடைந்து, செம்மையாக்கு, முற்றுவி, நன்கொடை, சலியாத.

III விடை கூறு :—

1. ஆலேத்தொழில்கள் வளர்ச்சி அடைய நம் நாட்டிலுள்ள சாதனங்கள் யாவை ?

2. ஜாம்ஷெட்ஜி டாடா யாருடைய மைந்தர் ? எந்த ஊரில் பிறந்தவர் ?

3. சீனுவுடன் டாடா குடும்பத்தினர் என்ன வியாபாரம் செய்தார்கள் ?

4. பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட நஷ்டத்தை டாடாக்கள் எப்படி ஈடுசெய்தனர் ?

5. ஜாம்ஷெட்ஜி டாடா முதன் முதல் ஸ்தாபித்த ஆலை எது ?

6. "எம்ப்ரஸ் மில்" எங்கு ஸ்தாபிக்கப் பட்டது? அந்த இடத்தை டாடா தேர்ந்தெடுத்த காரணம் என்ன ?

7. "ஸ்வதேசி மில்" ஸ்தாபிக்கப்பட்ட வரலாற்றைப் பத்து வரிகளில் எழுது.

8. தமது ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் களுக்குப் பிற நாடுகளில் கிராக்கி ஏற்பட, டாடா என்ன செய்தார் ?

9. இந்தியாவில் ஆலைத்தொழில்கள் பெருகுவதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்று டாடா கருதினர் ?

10. ஜாம்ஷெட்ஜி டாடாவின் திட்டங்கள் நிறைவேறுவதற்கு உதவியோர் யாவர் ?

11. விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் எங்கே நிறுவப்பட்டது ?

12. இரும்பு உருக்குத் தொழிற்சாலை எவ்விடத்தில் எவ்வாறு அமைக்கப்பட்டது ?

13. டாடா கம்பெனியாரின் லாபத்திலிருந்து நாட்டு நலனுக்காக என்ன செய்யப்படுகின்றது ?

## IV இலக்கணம் :—

1. கீழ்க்கண்ட பெயர்ச் சொற்களில் சில உயர்திணையைச் சார்ந்தவை, சில அஃறிணையைச் சார்ந்தவை. ஒவ்வொரு சொல் லுக்கும் உரிய திணையைக் குறிப்பிடு :—

மரம், தேவன், நாய், சேவல், ராமன், அரக்கன், நாள், மாதம், அவர்கள், சீதை, சிறுமியர், தென்னை, கற்கள்.

2. மேலே காட்டியுள்ள பெயர்ச் சொற்களுக்கு ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஐந்து பால்களுள் பொருத்தமானதைக் குறிப்பிடு.

3. சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று இடங்களில் ஒன்றைச் சார்ந்திருக்கும்.

நான், நாம், யான், யாம்—தன்மைப் பெயர்கள்.
நீ, நீர், நீவிர், நீயிர்—முன்னிலைப் பெயர்கள்.
இராமன், விநாயகன், மரம், கல், அவன், அவள், அது, அவை } படர்க்கைப் பெயர்கள்.

தன்மை, முன்னிலைப் பெயர்களுக்கு ஒருமை பன்மை மட்டும் உண்டு. ஆண், பெண் வேறுபாடு இல்லை.

# 8. பலவித மாணுக்கர்

மாணுக்கர் எல்லோரும் சமமான அறிவு ஆற்றல் களைப் பெற்றிருக்கவில்லை என்பதை அனுபவத்தி லிருந்து நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். சிலருக்குக் கல்வி கற்பதில் அதிக ஆர்வம் இருக்கும்; சிலர் காலத்தை வீணே கழிப்பதை விரும்புவர். ஒரு வகுப்பிலுள்ள மாணவர் இவ்வாறு பலவிதப் பட்டிருப் பதால்தான் வருட முடிவில் பரீட்சை நடத்தி மேல் வகுப்புக்குத் தகுதி உள்ள மாணவர், தகுதியற்ற மாணவர் என்று இருவகையாகப் பிரித்து விடு கின்றுர்கள் ஆசிரியர்கள்.

பண்டைக் காலத்தில் மாணவர்கள் ஆசிரிய ருடன் வாழ்ந்து கல்வி கற்று வந்தார்கள். இவ்வாறு கல்வி கற்கும் முறைக்கு "குருகுல வாசம்" என்று பெயர். தகுதிவாய்ந்த இளைஞர்களே மாணவர்களாக அனுமதிக்கப்பட்டனர். யார் யார் மாணுக்கராகத் தகுதியில்லாதவர்கள், மாணுக்கரை எவ்வாறு வகைப் படுத்தலாம் என்றெல்லாம் அக்கால நூலாசிரியர்கள் எழுதி வைத்துள்ளார்கள். அவை எல்லாம் தற்கால நிலைமைக்குப் பொருந்தா. ஏனெனில் தற்கால அரசாங்கத்தின் நோக்கம் வயது வந்த எல்லாச் சிறுவர்களுக்கும் கல்வி கற்பிக்கப்பட வேண்டு மென்பதாம். தகுதியில்லாதவர் என்று யாரும் ஒதுக்கப்படல் கூடாது. எனினும் பண்டை ஆசிரியர் களின் கருத்துக்களை நாம் தெரிந்துகொண்டு, தற்கால நிலைக்குப் பொருந்துவனவற்றை ஏற்றுக்கொள்ளலாம்.

பவணந்தி முனிவர் "நன்னூல்" என்ற சிறந்த இலக்கண நூலை இயற்றியுள்ளார். மாணவர் களைப் பற்றியும் பாடங் கேட்டலின் முறையைப்

பற்றியும், அவர் நன்னூலில் விளக்கமாகக் கூறி யுள்ளார். அவர் கருத்துப்படி, கள் குடிப்பவன், சோம்பல் மிக்கவன், மானத்தைப் பாராட்டுபவன் காமம் மிக்கவன், திருட்டுக் குணமுள்ளவன், தீராத நோயுள்ளவன், அறிவற்றவன், எதற்கெடுத்தாலும் பிணங்கி மாறுபடுபவன், கோபி, சதா தூங்குவதில் விருப்பமுள்ளவன், மந்த குணமுள்ளவன், பண்டைய நூல்களைக் கற்கவேண்டுமே என்று அஞ்சி மனந் தடுமாறுபவன், வீண் துணிச்சலுள்ளவன், பாவி, வஞ்சகன், இம்மாதிரி குண இயல்புள்ளவர்கள் மாணுக்கராதற்குத் தகுதியில்லாதவர்கள். இதையே,

> களி, மடி, மானி, காமி, கள்வன்,
> பிணியன், ஏழை, பிணக்கன், சினத்தன்
> துயில்வோன், மந்தன், தொன்னூற்கஞ்சித்
> தடுமாறுளத்தன், தறுகணன், பாவி
> படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே.

என்ற சூத்திரத்தில் நன்னூலாசிரியர் குறிப்பிட் டுள்ளார்.

மேற்கூறிய தீய குணங்கள் மாணுக்கரிடம் இருத்தல் கூடாது என்பதை நாமும் ஒப்புக்கொள்ள லாம். ஆனல் அத்தகைய துர்க்குணம் ஏதேனும் ஒரு மாணுக்கனிடம் அமைந்திருப்பின், அவனைச் சீர்திருத்தி, நல்வழிப்படுத்தி, அவனுக்குத் தகுந்த முறைகளைக் கையாண்டு கல்வி புகட்ட முயற்சிக்க வேண்டும். களவு, துஷ்டத்தனம் முதலிய தீக் குணங்கள் வாய்ந்த மாணவர்களுக்கெனத் தனிப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன.

நன்னூலார் மாணுக்கர்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளார். இந்த மூவகை மாணுக்கர்களின் இயல்புகளை உவமை முகத்தான் உணர வைக்கிருர் ;

அன்னப்பறவை போலவும் பசுவைப் போலவும் இருப்பவர் தலைமாணுக்கர். அன்னப்பறவையிடம் பாலையும் நீரையும் கலந்து வைத்தால் அது பாலை மட்டும் பிரித்துப் பருகும் இயல்புள்ளதெனப் பண்டைய ஆசிரியர் கூறுவர். இதேபோல் தான் கற்கும் விஷயங்களில் நல்லனவும் தீயனவும் கலந்திருந்தாலும் நல்லவற்றைமட்டும் பிரித்து மனத்திற் தேக்கிக்கொள்வான் தலைமாணுக்கன். புல் வைக்கோல் முதலியவற்றைப் பசு விரைவில் விழுங்கினுலும், பிறகு சாவதானமாக அமர்ந்து, அவற்றைக் கவளங் களாக வாய்க்குக் கொணர்ந்து அசை போட்டு மறுபடியும் விழுங்கும். உத்தம மாணுக்கனும் தான் விரைவாகப் படித்த நூல்களைத் திரும்பத் திரும்பச் சிந்தித்துத் தனதாக்கிக் கொள்வான்.

இடை மாணுக்கனுடைய இயல்புகள் மண், கிளி இவற்றின் தன்மைகளை ஒத்திருக்கும். மண்ணை எவ்வளவுக்குக் கொத்தி உழுது பண்படுத்து கிருேமோ, அவ்வளவுக்குப் பயிர்கள் செழித்துப் பலன் தரும்; உழைப்புக்குத் தகுந்த பலன் தருமே யன்றி அதிகப்படியான பலனை எதிர்பார்க்க முடியாது. இதே போல் ஆசிரியர் எவ்வளவு தூரம் பிரயாசை எடுத்துக் கற்பிக்கிருரோ அவ்வளவு தூரம் இடை மாணுக்கன் கல்விமானுவான். நாம் கற்பிக்கும் சொற்களை மட்டும் திரும்பத் திரும்பச் சொல்லும் கிளியின் இயல்பும் இடை மாணுக்கனிடம் உண்டு.

கடை மாணுக்கனுடைய இயல்புகளை அறிந்து கொள்ள வேண்டுமானுல், ஓட்டைக்குடம், ஆடு, எருமை, நெய்யரி, இவற்றின் குணங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஓட்டைக்குடத்தில் பெய்தநீர் எல்லாம் சிறிது நேரத்தில் வெளியேறி விடும்;

89805 சென்னை 600 008.

இவ்வாறே, கற்பித்த விஷயங்களைச் சிறிது நேரத்தில் மறந்து விடுவர் கடையாய மாணுக்கர். நல்லது தீயது என்று பாராமல், ஓரிடத்திலேயே நின்று வயிருர மேயாமல் எல்லா இலை தழைகளையும் கொறித்துச் செல்லும் ஆடு. எந்த நூலையும் பூர்த்தியாகக் கற்காமல் இதிற் கொஞ்சம், அதிற் கொஞ்சமாகக் கற்றுச் செல்வான் இழிந்த மாணுக்கன். சேற்று நீரில் மூழ்கியிருத்தலில் ஆனந்தம் பெறும் எருமை; இழிவான நூலைக் கற்பதில் மகிழ்ச்சி காண்பான் மூன்ரும் தர மாணவன். நெய்யரி தன் மீது ஊற்றிய நெய்யைக்கீழே விட்டு, கசடுகளை மட்டும் தாங்கி நிற்கும்; இதேபோல் தான் கற்றவற்றில் நல்லதை மறந்துவிட்டுத் தீயதை மட்டும் கருத்தில் கொள்வான் கடை மாணுக்கன்.

மாணுக்கரின் வகைகளைக் கூறும் நன்னூல் சூத்திரம் :—

> அன்னம் ஆவே, மண்ணெடு கிளியே,
> இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யரி,
> அன்னர் தலை, இடை, கடைமாணுக்கர்.

TB 031(2) N52

பெரும்பாலும் சூழ்நிலை காரணமாகவே மாணுக்கருக்கு விரும்பத்தகாத பண்புகள் ஏற்படுகின்றன. எனவே நல்லோருடன் பழகி, நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு எல்லா மாணுக்கரும் தலை மாணுக்கராக முயற்சித்தல் வேண்டும்.

## பயிற்சி

I பொருள் கூறு :—

ஆற்றல், ஆர்வம், வீணே, பலவிதப்படு, குருகுலவாசம், தகுதி, ஒதுக்கப்படல், தடுமாறுபவன், துணிச்சல், படிறன், சூத்திரம், புகட்ட, உவமை முகத்தான், கவளம், அசை போட்டு, பிரயாசை, வயிருர.

II உன் சொந்த வாக்கியங்களில் அமைத்தெழுது :—

ஆர்வம், வீணே, தடுமாறு, அசைபோடு, வயிருர.

III விடை கூறு :—

1. பண்டைக் காலத்தில் மாணவர் ஆசிரியரிடம் சென்று கல்விகற்ற முறைக்குப் பெயர் என்ன?

2. தற்காலத்தில் கல்வி சம்பந்தமாக அரசாங்கத்தின் நோக்கம் என்ன?

3. பவணந்தி முனிவர் எழுதிய நூல் எது?

4. எந்தக் குணமுள்ளவர் மாணுக்கராகத் தகுதியற்றவர்?

5. தற்காலத்தில் எத்தகைய மாணவர்களுக்கெனத் தனிப் பள்ளிகள் நடத்தப் படுகின்றன?

6. தலே மாணுக்கரின் இயல்புகளுக்கு உவமை என்ன?

7. மண், கிளி—இவை இடை மாணுக்கனுக்கு உவமை யாவது எங்ஙனம்?

8. ஓட்டைக் குடம், ஆடு, எருமை, நெய்யரி இவை கடை மாணுக்கனுக்கு எவ்வாறு உவமையாகின்றன?

IV இலக்கணம் :—

வினைச்சொற்களில் வினைமுற்றுக்களும், எச்ச வினைகளும் உண்டு. தொழில் முடிந்ததைக் குறிக்கும் வினைச்சொல் வினை முற்று. தொழில் முடியாத நிலையில் உள்ள வினைச்சொல் எச்ச வினை எனப்படும்.

1. நான் ஓடினேன். (வினைமுற்று)
2. அவன் வந்து, சற்றுத் தாமதித்து என்னிடம் பேசினுன். (எச்ச வினைகள்)
3. நான் பார்த்த புத்தகம் இங்கு இல்லை. (எச்சவினை)

கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள எச்சவினைகளையும் முற்று வினைகளையும் கூறு :—

1. நான் நேற்றுக்கண்ட யானை இன்று இங்கு இல்லை.
2. நீ உண்ட சோறு சுவையாயிருந்ததா?
3. அவன் வந்தால் என் கஷ்டம் தீரும்.

# 9. மார்க்கோனி

லண்டன் மாநகரத் தலைமைத் தபாலாபீஸ் மொட்டை மாடியில் சில விஞ்ஞானக் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தபாலாபீஸ் உத்தியோகஸ்தர்களும் எஞ்சினியர்களும் அவற்றைச் சூழ்ந்து நின்று ஏதேதோ பேசிக் கொண்டிருக்கின்றனர். ஏதேனும் ஜாலவித்தை நடக்கும்போலத் தோன்றுகிறது. அப்பழுக்கின்றி உடை தரித்த இத்தாலிய வாலிபர் ஒருவர் இந்தக் கருவிகளுக் கருகே வருகிறார். எல்லோரும் அவரையே பார்க்கின்றனர். இருபது வயதுக்கு மேலாகாத அவரா மந்திரவாதி? பார்க்கலாம்.

அவர் சிறிதும் பிழையில்லாத ஆங்கிலத்தில் பேசத்தொடங்கி, "சபையோர்களே! இதோ பாருங்கள்! இந்த இடத்திலிருந்து ஒரு கம்பிகூட வேறிடத்திற்குச் செல்லவில்லை. இதோ இருக்கும் மோர்சு கருவியில் சாதாரணத் தந்திச் செய்தியை அனுப்புவதுபோலவே இந்தச் செய்தியையும் அனுப்புகிறேன். என்ன நடக்கிறதென்பதைப் பாருங்கள்," என்று கூறிவிட்டுச் சாவியை அழுத்துகிறார். "கட்-கட, கட-கட-கட்...." ஏதோ செய்தி அனுப்பப்படுகிறது. சிறிது நேரத்தில் அருகே இருந்த ஒரு மோர்சு ஒலிப்பான், 'கட்-கட-கட்......'என்று ஆரம்பிக்கிறது. எங்கிருந்தோ பதில் செய்தி வருகிறது போலிருக்கிறதே! மந்திரவாதி அச்செய்தியைச் சாதாரண பாஷையில் மொழி பெயர்த்து வாசிக்கிறார். ஆம்! முன் அனுப்பிய செய்திக்குப் பதிலாகத்தான் இருக்கிறது அது.

அவர் மேலும் பேசத்தொடங்கி, "இங்குள்ளவைகளே போன்ற கருவிகள் தேம்ஸ் நதிக் கரையிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் முதலில்

அனுப்பிய செய்தியை அங்குள்ளோர் ஏற்றுக்கொண்டு இப்பதிலே அனுப்பியிருக்கின்றனர். கம்பியால் சம்பந்

மார்க்கோனி

தப் படுத்தாமலே ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செய்தி அனுப்பமுடியும் என்பதைக் காட்டவே நான் இங்கே வந்தேன். இக்கருவியின் மூலமாக நீங்கள் யார் வேண்டுமானாலும் செய்தி அனுப்புங்கள்; இக்கருவியைப் பரிசோதியுங்கள்,'' என்று கூறிவிட்டு உட்காருகிறார். அவர்தான் குக்லில்மோ மார்க்கோனி என்ற மின்சார மாயாவி.

மார்க்கோனி 1874-ம் வருஷம் இத்தாலி நாட்டிலுள்ள போலோக்னா என்னும் நகரில் பிறந்தார்.

அவருடைய தந்தையார் ஒரு பெரிய நிலச்சுவான்தார். அவருடைய தாயார் அயர்லாந்து நாட்டு மாதரசியாவர். அவருக்கு அல்பான்ஸோ என்ற மூத்த சகோதரர் ஒருவர் இருந்தார். இளமையில் மார்க்கோனி 'நல்ல பிள்ளை'யாக நடக்கவில்லை; அதாவது துஷ்டத்தனம் செய்யாமல் தம்முடைய பாடங்களைப் படித்துப் பெற்றோர் பெரியவர் சொற்கேட்டு நடக்கவில்லை. ஆயினும் பிற்காலத்தில் அவர் பெற்ற பெருமைக்குச் சில அறிகுறிகள் இளமையிலேயே அவரிடம் காணப்பட்டன. ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது அதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்துவதும், தோல்வியைக் கண்டு அதைரியப்படாமல் மறுபடியும் முயற்சித்துத் தம் காரியத்தில் வெற்றி பெறுவதும் சிறு பிராயத்திலேயே அவரிடம் காணப்பட்ட குணங்களாகும்.

மார்க்கோனியின் தந்தையார் ஓர் ஆசிரியரை நியமித்து அவருக்கு வீட்டிலேயே கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தார். பிறகு லெக்ஹார்ன் என்ற ஊரிலிருந்த உயர்தரக் கலாசாலை யொன்றில் மார்க்கோனி சேர்ந்து படித்தார். அக்காலத்தில் அவருக்குப் பௌதிக சாஸ்திரத்திலும் முக்கியமாக மின்சார நூல்களிலும் விருப்பஞ் சென்றது. அத்துறையில் கிடைத்த நூல்களையெல்லாம் அவர் படித்து முடித்தார். 1894-ம் வருஷ முதல் மின்சார அலைகளின் மீது அவருடைய கவனஞ் சென்றது. சில வருஷங்களுக்கு முன்பு ஹெர்ட்ஸ் என்ற ஜெர்மானியப் பௌதிக ஆசிரியர் மின்சார அலைகள் இருக்கின்றன என்பதைச் சோதனைகளால் நிரூபித்துக் காட்டியிருந்தார். அந்த அலைகளை உபயோகித்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செய்தி அனுப்ப ஒரு கருவியைக் கண்டுபிடிப்

படதே மார்க்கோனி தம்முடைய ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட விஷயம்.

பாண்டகியோ என்ற கிராமத்தில் தம்முடைய தந்தையாருக்குச் சொந்தமான ஒரு வீட்டில் மார்க்கோனி மின்சார அலைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்யத் தொடங்கினர். அந்த வீட்டைச் சூழ்ந்து ஒரு பெரிய தோட்டமுண்டு. அவருடைய ஆராய்ச்சிகளுக்கு அது மிகவும் பயன்பட்டது. அவருடைய மூத்த சகோதரரும் அவருக்கு உதவி செய்தார். ஆராய்ச்சிகளுக்குத் தேவையான கருவிகளை அவர் தாமே செய்து கொண்டார். தந்தையாரிடமிருந்து இவற்றிற்கு வேண்டிய பணத்தைப் பெறுவது மார்க்கோனிக்கு எளிதாக இல்லை. ஏனெனில் தந்தையாருக்கு இந்த ஆராய்ச்சிகளில் நம்பிக்கை கிடையாது. லாபமில்லாமல் பணச் செலவு செய்வது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் மார்க்கோனியின் தாயாருடைய சிபார்சினுல் பணம் கொடுக்கப்படும். மேலும் மார்க்கோனி சரியான நேரங்களில் உண்ணவும் உடுக்கவும் மறந்து ஒரே மனேலயத்துடன் ஆராய்ச்சி செய்த பொழுது அவருடைய தாயாரே அவருக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்துவந்தார். தம்முடைய இளைய புதல்வரிடம் அவருக்கு அளவிலா அன்பு. புதல்வருடைய பரிசோதனைகள் அவருக்கு ஒன்றும் புரியாவிட்டாலும் ஒரு காலத்தில் மார்க்கோனி புகழ் பெறுவார் என்று திடமாக அவர் நம்பி வந்தார்.

நீரில் செல்லும் அலைகளை நாம் கண்டிருக்கிறோம். இவையெல்லாம் ஒரே மாதிரியானவை அல்ல; சில நீண்டும் சில குறுகியும், சில பெரியவையாயும் சில சிறியவையாயும் இருக்கின்றன. ஒருவாறு இந்த அலை

களை ஒத்த மின்சார அலைகளை, காற்றைக் காட்டிலும் நுட்பமான ஆகாயத்தில் எழுப்பலாம். அவற்றின் மூலமாகச் செய்தி அனுப்ப வேண்டுமானால் அலைகள் ஒரே தொடராகச் செல்லாமல் நம்முடைய செய்திக்குத் தகுந்தாற்போல் விட்டு விட்டுச் செல்லும்படி செய்யவேண்டும். அந்த அலைகள் மோதுவதால் இயங்கி, முதலில் அனுப்பிய செய்தியைத் தெரிவிக்க, ஏற்குங் கருவி (Receiver) யொன்று செய்யவேண்டும். கம்பியில்லாமல் செய்தி யனுப்பும் முறையின் சுருக்கம் இவ்வளவுதான்.

ஏற்குங் கருவிகளில் பல வகை யுண்டு. பிரான்லி என்பவர் 'கொஹிரர்' (Coherer) என்ற ஒரு கருவியைக் கண்டு பிடித்திருந்தார். மார்க்கோனி அக்கருவியில் சில மாறுதல்களைச் செய்து அதைச் சிறந்ததாகச் செய்து கொண்டார். செய்தி அனுப்பு மிடத்தில் மின்சார அலைகளை எழுப்பும் கருவி யொன்று உண்டு. அக்கருவிக்கு இரண்டு முனைகள் இருக்கும். அவற்றில் ஒன்றைக் கம்பியால் பூமியுடன் சேர்த்து மற்றொன்றை ஓர் உயர்ந்த இடத்தில் நட்டுவைத்த கம்பியுடன் பிணைத்தால் வெகுதூரம் செய்தியனுப்பலாம் என்று மாரக்கோனி கண்டுபிடித்தார். உயரமான இடத்தில் வைக்கப்படும் கம்பிக்கு 'ஏரியல்' (Aerial) என்று பெயர். செய்தியை ஏற்குங் கருவியுடன் ஒரு ஏரியலைப் பிணைப்பதும் பூமியைச் சம்பந்தப்படுத்துவதும் அவசியம் என்று மார்க்கோனி தெரிந்து கொண்டார்.

1895-ல் ஒரு மைல் தூரத்திற்குக் கம்பியில்லாச் செய்தி அனுப்ப முடிந்தது. இதைக் கண்ட பிறகு தான் மார்க்கோனியின் தந்தையார் அவருக்குத் தடை சொல்லாமல் உதவிசெய்ய முன்வந்தார். மார்க்கோனி இங்கிலாந்துக்குச் சென்று தாம் கண்டுபிடித்தவற்

றைப் பலருக்குக் காட்ட வேண்டுமென்பது நிச்சயிக் கப்பட்டது. மார்க்கோனியின் தாயார் இங்கிலாந்தி லும் அயர்லாந்திலும் இருந்த தம்முடைய நண்பர் சிலருக்குக் கடிதம் எழுதி அவர்களுடைய ஆதரவைப் பெற்ருர். இதன் பிறகு மார்க்கோனி இங்கிலாந்து சென்று வில்லியம் பிரீஸ் என்பவருடைய நட்பைத் தேடிக்கொண்டார். பிரீஸ் லண்டன் தலைமைத் தபால் நிலயத்தில் பிரதம எஞ்சினியர் உத்தியோகம் பார்த்து வந்தாராதலால் மார்க்கோனியின் நூதன முறையை ஆதரிக்க அவரால் ஏற்பாடு செய்ய முடிந் தது. முன்னே கூறியவாறு பல உத்தியோகஸ்தர் முன்னிலையில் மார்க்கோனியின் நூதன முறை அரங் கேற்றப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இப் புதிய முறையின் உபயோகத்தை உணர்ந்து அதற்கு ஆதரவளிக்க முன்வந்தனர்.

இதன் பிறகு சாலிஸ்பெரி மைதானத்திலும் பிரிஸ்டல் கடலிலும் சோதனைகள் செய்து மார்க் கோனி ஒன்பது மைல்தூரம் செய்தியனுப்பினர். 1896-ல் அவர் தாம் கண்டுபிடித்த கருவிகளுக்குப் பாதுகாப்பு பெற்றுக்கொண்டார். இத்தாலிய அரசாங் கத்தாரும் மார்க்கோனியின் புதிய முறையை அறிந்து அவரை ஆதரிக்க முன்வந்தனர். அவர்களுடைய அழைப்புக்கு இணங்கி அவர் தம்முடைய தாய்நாடு சென்று இத்தாலி அரசரையும் அரசியையும், ஜனப் பிரதிநிதிகளையும் கண்டு பேசினர்.

1897-ல் இங்கிலாந்துக்குத் திரும்பிவந்த இவர் மார்க்கோனி கம்பெனி அமைத்தார். தம்முடைய தந்தையாருடைய குணங்களில் சில மார்க்கோனி யிடம் அமைந்திருந்தன ; அவற்றில் ஒன்று பணஞ் சேர்ப்பது. தாம் கண்டுபிடித்தவற்றை வியாபார

முறையில் உபயோகித்து அவர் பெருஞ்செல்வம் தேடினூர். சீக்கிரத்தில் கம்பியில்லாத் தந்தி முறை யின் உபயோகம் மக்களுக்கு விளங்கியது. கப்பல் களில் இக்கருவிகளை அமைத்தால் அவற்றிற்கு ஆபத்து நேரும்பொழுது மக்களின் உயிரைக் காக்க முடியும் என்று நிரூபிக்கப்பட்டது.

1898-ல் மார்க்கோனி இங்கிலாந்தின் கீழைக் கரையிலிருந்து பிரான்ஸின் மேலைக்கரைக்குச் செய்தி யனுப்பினூர். முடிவாக 1901-ல் இங்கிலாந்தில் போல்து என்ற இடத்திலிருந்து அமெரிக்காவிலுள்ள நியூ பௌண்ட்லாண்டிற்குச் செய்தி அனுப்ப முடிந் தது. இக்காலங்களில் டைம்ஸ் போன்ற செய்தித் தாள்கள் மார்க்கோனியின் முறையைப்பற்றி விளக்கி எழுதி, பொதுமக்களுக்கு அதன் உபயோகத்தையும் அவசியத்தையும் பிரசாரம் செய்தன. விக்டோரியா ராணியாரும் எட்வர்டு இளவரசரும் மார்க்கோனி யைக் கண்டு பேசி அவரை மிகவும் ஆதரித்தனர். 1909-ல் மார்க்கோனிக்குப் பௌதிக சாஸ்திர நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதைத் தவிர அவர் பல பதக் கங்களும் பட்டங்களும் பெற்ருர்.

முதல் உலக மகாயுத்தத்தில் மார்க்கோனி இத் தாலிய சைன்யத்தில் ஊழியஞ் செய்தார். அக்காலத் தில் வெகுதூரம் செய்தி யனுப்புவதற்குக் குறுகிய அலைகளை உபயோகித்தல் நலம் என்று அவர் கண்டு பிடித்தார். 1918-ல் இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலி யாவிற்குச் செய்தி அனுப்பப்பட்டது. மார்க்கோனி கம்பெனியார் 'வால்வு' என்ற கருவியை உபயோகித் துப் பேச்சையும் சங்கீதத்தையும் கம்பியில்லா முறை யால் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர். 1920-ல் இங்கிலாந்தில் முதன்

முதல் ஜனங்கள் 'ரேடியோ' என்ற ஒலிபரப்பியின் சங்கீதத்தை அனுபவித்தனர்.

தம் நாட்டிலும் பிற நாடுகளிலும் பெரும் புகழ் பெற்று வாழ்ந்திருந்த மார்க்கோனி 1937-ம் வருஷம் ஜூலை மாதம் மரணமடைந்தார். இருபதாம் நூற்றுண்டில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தவற்றில் மிகவும் அதிசயமானதும் உபயோகமானதும் ரேடியோ தான் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். அது இப்பொழுது அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்குப் பெரிதும் காரணமாயிருந்தவர் மார்க்கோனியே என்பது விஞ்ஞானிகள் எல்லோருக்கும் உடன்பாடே.

## பயிற்சி

I பொருள் கூறு :—

மொட்டைமாடி, ஜாலவித்தை, அப்பழுக்கின்றி, சாவி, ஒலிப்பான், மாயாவி, அதைரியம், பௌதிக சாஸ்திரம், மனோலயம், உடன்பாடு.

II உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி :—

அப்பழுக்கின்றி, அதைரியம், மனோலயம், உடன்பாடு.

III விடை கூறு :—

1. லண்டன் மாநகரத் தலைமைத் தபாலாபீஸில் நடைபெற்ற சோதனை என்ன ?

2. சிறுவயதில் மார்க்கோனியிடம் காணப்பட்ட நற்குணங்கள் என்ன ?

3. மின்சார அலைகளை முதலில் கண்டுபிடித்தவர் யார் ?

4. மின்சார அலைகளைப்பற்றி மார்க்கோனி செய்த சோதனையின் நோக்கம் என்ன ?

5. மார்க்கோனியின் ஆராய்ச்சிகளை அவருடைய தந்தையார் ஏன் முதலில் ஆதரிக்கவில்லை ?

6. ஆராய்ச்சிக் காலங்களில் மார்க்கோனியின் தாயார் எவ்வாறு அவருக்கு உதவி செய்தார்?

7. மின்சார அலைகளால் செய்தி அனுப்பும் முறையின் சுருக்கம் என்ன?

8. மின்சார அலைகளை எழுப்பும் கருவியையும், ஏற்கும் கருவியையும் எவற்றுடன் இணைத்தால் வெகு தூரத்திற்குச் செய்தி அனுப்ப முடியும்?

9. மார்க்கோனியின் கம்பியில்லாச் செய்தி அனுப்பு முறையை ஆதரிக்க முன்வந்த ஆங்கிலேயர் யார்?

10. இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு முதன்முதல் எப்பொழுது கம்பியில்லாத் தந்திச் செய்தி அனுப்ப முடிந்தது?

11. பௌதிக சாஸ்திர நோபல் பரிசு மார்க்கோனிக்கு எப்பொழுது கிடைத்தது?

IV இலக்கணம் :—

1. நிறுத்தல் குறிகளில் முற்றுப்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி ஆகிய மூன்றையும் உபயோகிக்க உங்களுக்குத் தெரியும். காற்புள்ளி ( , ), அரைப்புள்ளி ( ; ), முக்காற்புள்ளி ( : ), ஆகியவற்றின் உபயோகத்தைப் பின்வரும் உதாரணங்கள் விளக்கும்.

காற்புள்ளி :—(அ) இராமன் என் வீட்டுக்கு வந்து, என்னிடம் பல புத்தகங்களை வாங்கிக்கொண்டு, இரண்டு வாரங்களுக்குள் திரும்பத் தருவதாகக் கூறினான். (ஆ) நான் கடைக்குச் சென்று, காய்கறிகள், பருப்புவகைகள், எண்ணெய், நெய், அரிசி முதலிய உணவுப் பொருள்களை வாங்கினேன். (இ) நீ பள்ளிக்குச் செல்லவேண்டாம். ஏனெனில், இன்று விடுமுறைநாள்.

அரைப் புள்ளி :—மார்க்கோனி இளமையிலேயே பல விஞ்ஞான நூல்களைக் கற்றார்; மின்சார அலைகளைப்பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்தார்; கம்பியில்லாமலேயே தொலைதூரத்திற்குச் செய்தி அனுப்ப முயற்சித்தார்.

முக்காற்புள்ளி :—இந்தப் பக்கத்திலுள்ள தலைப்புகளுக்குப் பின் முக்காற்புள்ளி அமைந்திருப்பதைக் கவனிக்கவும்.

2. உவமை: ஒரு பொருளை மற்றொரு பொருளுடன் ஒப்பிட்டுக் கூறுவதுண்டு.

புலிபோன்ற மன்னன்; அன்னம் போன்ற அணங்கு; கிளியை நிகர்த்த குழந்தை; இம்மாதிரி அமைப்பது உவமை அணி எனப்படும். போன்ற, நிகர்த்த முதலிய சொற்கள் உவம உருபுகள் எனப்படும்.

3. உருவகம்: உவம உருபு கொடாமல், ஒரு பொருளை அதற்கு ஒப்பாகக் கூறப்படும் பொருளாகவே சொல்வது உருவக அணி ஆகும்.

மன்னனாகிய புலி; பெண்ணாகிய அன்னம்; துயரக் கடல்; ஆனந்த சாகரம்.

4. பின்வரும் வாக்கியங்களிலுள்ள உவமை, உருவகங்களை எடுத்துக் கூறு:—

(அ) பசுப்போன்ற பையன் இவன்.

(ஆ) மலைபோன்ற வில்லை வளைத்து நாகம் போன்ற நாணை ஏற்றினான்.

(இ) வாழ்க்கைக் கடலைக் கடக்க, நல்லாசிரியனாகிய ஓடம் தேவை.

# செய்யுட் பகுதி

## I வாழ்த்து

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவில் பணியச் செய்
வாய் ; படைப் போன் முதலாம்
விண் கண்ட தெய்வம் பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.

—குமரகுருபர சுவாமிகள்

அரியானை அந்தணர்தம் சிந்தையானை [கும்
அருமறையின் அகத்தானை அணுவையார்க்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலை
திகழொளியைத் தேவர்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகட லைக் குலவரையை கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

—திருநாவுக்கரசர்

ஒளிமணி வண்ணன் என்கோ
ஒருவன் என்(று) ஏத்த நின்ற
நளிர்மதிச்சடையன் என்கோ,
நான்முகக் கடவுள் என்கோ,

அளிமகிழ்ந்(து) உலகம் எல்லாம்
படைத்(து) அவை ஏத்த நின்ற
களிமலர்த் துளவன் எம்மான்
கண்ணனை மாய னையே.

—நம்மாழ்வார்

## குறிப்புரை

1. மண்கண்ட வெண்குடை - பூமி முழுதும் தன் நிழலின் கண் அகப்படுத்தும் வெண் கொற்றக் குடை. பண் - பாடல். படைப்போன் - பிரமன். விளம்பில் - சொல்லுமிடத்து. கண் கண்ட தெய்வம் - தானிருப்பதை அவ்வப்பொழுது தெரிவிக்கும் கடவுள் ; பிரத்யட்ச தெய்வம்.

2. அரியான் - உணர்தற்கு அரியவன். மறை - வேதம். அகத்தான் - உள்ளிருப்பவன். கரியான் - திருமால். நான் முகன் - பிரமன். கனல் - நெருப்பு. கனைகடல் - ஒலிக்கின்ற கடல். குலவரை - மேரு, இமயம் முதலிய குல பர்வதங்கள். புலியூர் - சிதம்பரம். பேசாத - புகழாத.

3. மணி - நீலமணி. வண்ணன் - நிறத்தையுடையவன். என்கோ - என்று சொல்வேனே. ஒருவன் - ஒப்பற்றவன். நளிர்மதிச் சடையன் - குளிர்ந்த சந்திரனைத் தலையில் அணிந் துள்ள சிவபெருமான். அளி மகிழ்ந்து - காத்தலில் மகிழ்ச்சி கொண்டு. களி மலர்த் துளவன் - தேன் பொருந்திய துளசி யனிந்தவன். எம்மான் - எம் தலைவன். மாயன் - திருமால்.

# II நீதி

## நன்னெறி

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்ருேர் ;–துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் ! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து ? (1)

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி(து); ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க ;—ஈசற்கு
நல்லோன் எறிசிலேயோ, நன்னுதால் ! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு ? (2)

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும் ;—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. (3)

கடலே அனேயம்யாம் கல்வியால் என்னும்
அடலே(று) அனேய செருக்காழ்த்தி—விடலே ;
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். (4)

உள்ளம் கவர்ந்தெழுந்(து) ஓங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க ;—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. (5)

மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் தமைத்தாம் மருவின் ;—பலியேல்
கடவுள் அவிர்சடைமேல் கட்செவி அஞ்சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து. (6)

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோம் என்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண் டூதுமலர் ஈர்ங்கோதாய் ! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. (7)

இல்லானுக்(கு) அன்பிங்(கு) இடம்பொருள் ஏவல்மற்(று)
எல்லாம் இருந்துமவற்(கு) என்செய்யும் ?—நல்லாய் !
மொழியிலார்க்(கு) ஏது முதுநூல் ? தெரியும்
விழியிலார்க்(கு) ஏது விளக்கு ? (8)

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே !—பொன் செய்(து)
அதிர்வளையாய் ! பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். (9)

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண்(டு) உள்ளம்
எரியின் இழுதாவர் என்க ;—தெரியிழாய் !
மண்டு பிணியால் வருந்தும் பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (10)

கைம்மா(று) உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர் ;—அம்மா !
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. (11)

கொள்ளும் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளம் கனிந்தறஞ்செய்(து) உய்கவே ;—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு. (12)

## குறிப்புரை

1. முகமன் - உபசார வார்த்தை. இயம்பாதவர் கண்ணும் - சொல்லாதவர்களிடத்தும். பொலி குழலாய் - விளங்குகின்ற கூந்தலையுடைய பெண்ணே. துன்று சுவை - நிறைந்த ருசியுடன் கூடிய உணவு. பூ கை - அழகிய கை. நயந்து - விரும்பி.

2. மாசு அற்ற - குற்றமில்லாத. வன் சொல் - கடுமையான சொல். பேசுற்ற - பேசும்படியான. பிறிது - வேறு (அதாவது இனிமை அல்லாதது). ஈசற்கு - சிவபெருமானுக்கு. நல்லோன் - நல்ல மனமுடைய சாக்கிய நாயனார். சிலை - கல். கருப்பு வில்லோன் - கரும்பை வில்லாக உடைய மன்மதன். நல் நுதால் - நல்ல நெற்றியையுடைய பெண்ணே. (சாக்கிய நாயனார் கற்களையே மலராக நினைத்து சிவபெருமானுக்கு அர்ச்சித்தார். அவருக்கு முக்தி கொடுத்தார் சிவபெருமான். மன்மதன் சிவபெருமான் தவஞ் செய்த பொழுது, அதைக் கலைக்க எண்ணி அவர்மீது மலர்களை எறிந்தான். அவரது நெற்றிக் கண்ணால் எரிக்கப் பட்டான்.)

3. 'பிறர்க்குதவி செய்யாக் கருங்கடல் நீர்' என்றது கடல் நீர் குடிப்பதற்குத் தகுதியற்றிருப்பதால். புயல் - மேகம். முகந்து - மொண்டு. பெய்யா - பெய்து. பிறர்க்கு உதவி செய்யாதவருடைய பெருஞ் செல்வம். அவ்வாறு உதவி செய்யும் பிறரை அடைந்து, பின்னோருக்குப் புகழ் கொடுக்கும் பேறுகிவிடும்.

4. 'கடல் அனையம் கல்வியால்' என்றது பரந்த கல்வி யறிவைக் குறிக்கும். அடல் ஏறு - கொல்லுந்தன்மையுள்ள சிங்கம். செருக்கு ஆழ்த்தி விடல் - கர்வத்தை அமிழ்த்தி விடுக. முனிக்கு அரசு - முனிவர்களில் தலைவரான அகத்தியர். முழங்கும் பனிகடல் - ஒலித்துக் கொண்டிருக்கும் குளிர்ந்த கடல்.

5. உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் - மனதைத் தன் வயப்படுத்தி மேன் மேலும் அதிகரிக்கிற கோபம். தடம்

கரை - குளக்கரை. பேர்த்து விடுதல் - உடைத்து (வெள்ளத் தைப்) போகவிடுதல்.

6. விரவலர் - பகைவர். அஞ்சார் - பயப்படமாட்டார். மருவின் - பொருந்திஞல். பலி ஏல் கடவுள் - (ஒரு சமயம்) பிச்சை யெடுத்த கடவுளான சிவபெருமான். கட்செவி - பாம்பு. படர் சிறை - விசாலமான சிறகுகளை உடைய. புள் அரசு - கருடன்.

7. தொலையா - அழியாத. தோற்றத்தோம் - பிறப்பை உடையோம். தலையாயவர் - தலைமை பொருந்தியவர், பெரி யோர். சார்தல் - அடைதல். இறைக்கும் - சப்திக்கும். ஈர்ங் கோதாய் - குளிர்ந்த மாலையணிந்த பெண்ணே. வந்தன்று - வந்தது.

[சிவபெருமான் மேருவை வில்லாக வளைத்த காலத்தில் அதற்கு வளைவு ஏற்பட்டது.]

8. அன்பு இல்லானுக்கு என்று மாற்றிப் பொருளுரைக்க. ஏவல் - ஏவலாட்கள். நல்லாய் - நற்குணமுள்ளவளே. மொழி யிலார் - ஊமைகள். முதுநூல் - பழைய நூல். தெரியும் விழி - காணக்கூடிய விழி.

9. இருநீர் வியன் உலகம் - பெரிய நீர் சூழ்ந்த உலகம். பொன்செய்து அதிர் வளையாய் - பொன்ஞல் செய்யப்பட்டு ஒலிக் கின்ற வளையை உடையவளே. அழற் கதிர் - சூரியன். தண் ணென் கதிர் - சந்திரன்.

10. எரியின் இழுது ஆவர் - நெருப்பிலிட்ட நெய்போல் ஆவர். (உருகுவர்). தெரி இழாய் - தேர்ந்தெடுத்த ஆபரணங் களை அணிந்தவளே. மண்டு பிணி - நிறைந்த நோய். கலுழும் - அழும்.

11. கைம்மாறு - பதில் உபகாரம். உகவாமல் - விரும்பாமல். எயிறு - பல். வலியன - கடினமான (உணவுப்) பொருள்கள். மென்று - கடித்து. முதிர் சுவை - மிகுந்த ருசி.

12. கொடும் கூற்றம் - கொடிய யமன். கொல்வான் - கொல்ல. குறுகுதன் முன் - நெருங்கிவரு முன்ஞல். அணை கோலி வையார் - கரை கட்டி வைக்காதவர். பெருகுதற்கண் - வெள்ளப் பெருக்கு எடுத்தோடும் சமயத்து.

## III கதை

[நண்டு கொக்கைக் கொன்ற கதை]

மீனென்றையு மேதின்றுடல்
மிகவேவளர் கொக்கு
தானங்கொரு பானண்டுத
லைக்கண்டிரை கொள்ள
ஞானந்தரு மோனங்கொடு
நண்ணும்படி கண்டப்
பானண்டிதை "நீயிங்குறை
பண்பேதுரை," யென்ன (1)

"என்றென்னுரை செய்வேனினி
யானெங்ஙன முய்வேன்?
கொன்னுந்திய வலைகாரர்கள்
கூடிக்குள மேரி
மன்னுந்தட மெல்லாமிக
வளைந்தேவலை வீசிச்
சின்னஞ்சிறு பொடிமீன் முதற்
சேரப்பிடித் தாரே. (2)

இந்தக்குள நாளைக்கென
வெண்ணிக்கொடு போனார்
அந்தப்படி வந்தேபிடித்
தவர்காவிலெ டுத்தே

சந்தக்கடை தொறுமீன்கடை
தானேயென விற்பார்
எந்தப்படி யிவர்தப்புவ
தெனவெண்ணி யிருந்தேன்.'' (3)

"அந்தப்பழி காரர்வரு
முனமேயொரு பாயஞ்
சிந்தித்தன ஞனப்படிச்
செய்தாலவை யுய்யும்
எந்தப்படி யானும்மழைத்
திங்கே வருவாயேல்
இந்தக்குளம் விட்டோர்குள
மெய்தும்படி செய்வேன்.'' (4)

என்றேபக ராசன்சொல
வியல்நண்டதை நம்பிச்
சென்றேபல மீனேடுரை
செயவேயவை கூடி
நன்றேயென வரவொவ்வொரு
நடைக்கொன்று கொண்டேகிக்
கொன்றேசில தின்றேசில
கொடும்பாறையி லுலர்த்தி, (5)

அலவன்றசை தனையுண்டிட
வதையுங்கொடு செலவந்

நிலமெங்கணு மீனென்புக
ணிறைகொண்டது கண்டே
" நலதிங்கிது பலமீனையு
நனிதின்றது நமையுங்
கொலவந்தது நாமும்மிது
கொலுமுன்கொலு வோமே. (6)

நம்மால்வரு பிழையேயிது
நாமுமந்த மீன்போல்
சும்மாவிருந் தனமேற்கொலு
மதிலேயொரு சூழ்ச்சி
எம்மால்வகை வருமாறினி
செய்வே "மென வெண்ணி
அம்மாயன் கழுத்தைக்கவை
யடியானெருக் கியதே. (7)

நெருக்குண்டற வீழ்ந்தே கொக்கு
நீங்கிற்றுயிர் ; அலவன்
இருக்குந்தலம் ஏகித்தன(து)
இனத்தோடிருந் ததுவே
செருக்கும்பகை பெரிதாகிலும்
சிலதந்திர வகையால்
முருக்கும்படி நினைந்தாலதின்
முடியாததும் உள்தோ. (8)

—வீரமார்த்தாண்ட தேவர்

### குறிப்புரை

1. மீன் ஒன்றையுமே - மீன்மட்டுமே உணவாக. பண்பு - தன்மை, காரணம்.

2. கொன்னுந்திய - அச்சம் தருகிற. தடம் - தடாகம்.

3. காவு - தோட்சுமை. இவர் - இந்த மீன்கள்.

4. பழிகாரர் - கொலையஞ்சாத மீன் பிடிப்போர். சிந்தித்தனன் - ஆலோசித்தேன்.

5. பகராசன் - கொக்கின் அரசன். உரைசெயவே - பேசவே. கொடும்பாறை - வளைந்தபாறை.

6. அலவன் - நண்டு. நனி - மிகவும்.

7. கவையடி - பிளவுபட்ட பாதம்.

8. அற - அற்றுவிழ. ஏகி - சென்று. செருக்கும்பகை - கர்வத்தோடுள்ள பகை.

## IV பிறவகை

[கறுப்ப முதலியார் என்ற வள்ளலைப் பாடியது]

ஓர்கறுப்பும் இல்லாத தொண்டைவள
நன்னாட்டில் உதித்த வேளைச்
சீர்கறுப்பொன் றில்லாத கத்தூரி
மன்னனருள் சேயைப் பார்மேல்
ஆர்கறுப்பன் என்றுசொல்லி அழைத்தாலும்
நாமவனை அன்பி னாலே
பேர்கறுப்பன் நிறஞ்சிவப்பன் கீர்த்தியினால்
வெளுப்பனெனப் பேசு வோமே. (1)

—படிக்காசுப் புலவர்

[செல்வம் மனிதரியற்கையை மாற்றிவிடும்]

சிறியரே மதிக்கும் இந்தச்
செல்வம்வந்(து) உற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி
வாயுள்ளோர் மூகர் ஆவர் ;
பறியணி செவியு ளாரும்
பயில்தரு செவிடர் ஆவர் ;
குறிபெறும் கண்ணு ளாரும்
குருடராய் முடிவர் அன்றே. (2)

—வல்லூர் தேவராசப்பிள்ளை

[சோழன் நலங்கிள்ளி யுழை நின்று உறையூர் புகுந்த இளந் தத்தனெனும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்று வந்தானென்று கொல்லப் புக்குழி, கோவூர் கிழார் பாடி உய்யக் கொண்டது.]

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றே இன்றே, திறப்பட
நண்ணார் நாண அண்ணாந் தேகி
ஆங்கினி தொழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே. (3)

—புறநானூறு

## குறிப்புரை

1. ஓர் கறுப்பும் இல்லாத - ஒரு பஞ்சமும் இல்லாத, வேள் - பிரபு, வள்ளல். சீர் கறுப்பு ஒன்று இல்லாத - சிறப்பில் ஒரு குற்றமும் இல்லாத. கத்தூரி மன்னன் - கறுப்ப முதலியாருடைய தந்தை. சேய் - குழந்தை, மகன். பார்மேல் - பூமியின் மேல். பேர் கறுப்பன் - பெயர் மாத்திரம் கறுப்பன். நிறம் சிவப்பன் - சிவந்த நிற முடையவன். கீர்த்தியை வெண்மையாகக் கூறுவது கவிகளின் வழக்கமாதலால், 'கீர்த்தியினுல் வெளுப்பன்' என்றுர்.

2. ஞான்று - பொழுது. புன் - அற்பமான. மூகர் - ஊமையர். பறி அணி - பொன்னுல் ஆன ஆபரணம்.

3. வுள்ளியோர் - வள்ளல்கள். புள்ளிற்போகி - பறவை பழ மரங்களைத் தேடிச் செல்வதுபோலச் சென்று. நெடிய - நீண்டிட. சுரம் - பாலை நிலம். வடியா நா - திருத்தம் பெருத பேச்சு. வல்லாங்கு - இயன்ற மட்டும். சுற்றம் அருத்தி - உறவினர்களை உண்பித்து. ஓம்பாது - (பொருளை) வைத்துக் காப்பாற்ருமல். கூம்பாது வீசி - குறையாது வாரிச் செலவழித்து. வரிசை - பரிசில். தீது அறிந்தன்றே - தீங்கு செய்ய அறிந்ததோ? நண்ணுர் - பகைவர். அண்ணுந்து ஏகி - தருக்கிச்சென்று. செம்மல் - பெருமை.

தமிழ்நாட்டு ஆவணக்காப்பக நூலகம்
89805
சென்னை-600 008.

RGR 1111

# ASOKA VACHAKAM

BOOK II—FORM II

PART II—SPECIAL STUDY

BY

Vidwan S. MUTHU AYYANGAR, B.A. (Hons.), L.T.

*sst., Sir M. Ct. Muthiah Chettiar High School, Purasawalkam, Madras*

V. S. SWAMINATHAN

EDUCATIONAL PUBLISHER

MADURAI :: TIRUNELVELI

**Price Rs. 0—12—0**